


வேதாகமத்தின் படியே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் பரலோகத்திற்கு எழுந்தருளி தந்தையாகிய இறைவனின் வலது பக்கத்தில் மாட்சிமையுடன் வீற்றிருக்கிறார்


## உயிர்ப்புவிழாச் சிறப்பிதழ்

# தொண்டன்

சித்திரை - வைகாசி 1988

4-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டன்


சித்திரை - வைகாசி 1988

மலர்: 20 இதழ்: 03

ஆசிரியர் :

சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :

மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :

பீ. ஜோசப்

ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :

சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்.

தொடர்பு :

சமூகத் தொடர்புகள் நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை :

தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-


உள்ளே . . .


1. இதயத்திலிருந்து ... 1
2. பாஸ்கா ஞாயிறு ... 2
3. உயிர்த்தெழுந்தார் ... 3
4. ஞானப்பால் வழிந்த... ... 4
5. கிறிஸ்து உயிர்த்து விட்... 6
6. சிலுவையின் பாதையில் ... 8
7. தத்துவங்கள் பொய்ப...... 10
8. சிறுகதை - இழப்பு ... 11
9. யார் அந்த ஜோதி? ... 14
10. சொந்தத்தில் பத்தி... ... 16
11. அருள்திரு. ஆஞ்சலோ ... 17
12. அஞ்சலி ... 18
13. அன்னை அவள் ஒரு... ... 20
14. எல்லாம் நிறைவேறிற்று... 21
15. மன்னன் இயேசு உயிர்த்... 27
16. தொண்டன் வளர ... 25
17. குறுக்கெழுத்துப்போட்டி... 27


**எழுதுங்கள்!**

கிறீத்தவ - சமூகச் சிந்தனைகளைக் கொண்ட ஆக்கங்களைத் தொண்டன் எதிர்பார்க்கின்றான்,

புதிய சிந்தனைகளுக்கு - புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள்! ஏற்றவையாயின் பிரசுரிப்போம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து.....

கிறீஸ்துவின் உயிர்ப்பிலே புது வாழ்வு பிறந்தது. சித்திரையில் புது வருடமும் பிறந்துவிட்டது. ஆனல் எமது பழைய குறைகள் மட்டும் இன்னும் நீங்கவில்லை. புதியன புகுதல் வேண்டும். பழையன - வேண்டாதன கழிதலும் வேண்டும்.

தொண்டன் அடிக்கடி தாமதமாக வருவது வாசகர்களுக்கு பெருங்குறையாகத் தோன்றலாம். இதற்கு எத்தனையோ காரணங்களைச், சாட்டுப் போக்குகளை நாம் சொல்லி வந்தாலும் எமக்குள்ள பொறுப்பை தட்டிக் கழித்துவிடவில்லை. இக் குறையை நீக்குவதற்கு பல முயற்சிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். தமிழ்ப் புது வருடத்தில் இக்குறை நீங்கி விடுமென்று நம்புகிறேம்.

தொண்டன் — கிறீஸ்தவ இலக்கிய ஏடு என்று பெருமைப்படும் நாம் அதையிட்டு சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேம்.

கிறீஸ்தவ இலக்கியமென்றல் அது கிறிஸ்தவர்களுக்கே உரியது என்பதன்று. கிறீஸ்துவையும் அவர் போதனைகளையும் மையமாகக் கொண்டு இலக்கியத்தை வளர்ப்பதே எமது பணி. எனவே இதில் அனைவரது பங்கும் அவசியம்.

தொண்டன் — திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் உருவானலும், இது தமிழ் மக்கள் அனைவருக்குமே உரித்தாக வேண்டும் என்பது எமது விருப்பம். இதற்கேற்ப அனைத்து மாவட்ட இலக்கியவாதிகளின் பங்களிப்பையும் எதிர்பார்க்கின்றேம்.

வெளியிடுவோர் - ஆசிரியர் போன்றேரின் கருத்துக்களையுப் பறைசாற்றும் சாதனம் அல்ல தொண்டன். படைப்பாளிகள் பலரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பம் அளிப்பதே எமது நோக்கம், தொண்டனின் இலட்சியம். இக் கருத்துக்களைச் சுவைத்து விமர்சிப்பது வாசகரின் கடமை. இதனல் புதிய எழுத்தாளர்கள் தோன்றவும், வளரவும் வாய்ப்புண்டு.

இந்த வகையில் தொண்டன் தன் பாதையில் தொடர்ந்து நடக்க அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்கிறேம்.

- சி. பி. இராஜேந்திரம்.




**கிறீஸ்துவோடு உயிர்த்தெழுந்தவர்களாயின் மேல் உலகில் உள்ளவற்றை நாடுங்கள்.**

— கொலே 3/1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**************

# பாஸ்கா ஞாயிறு

**************

விசுவாசத்தின் அடித்தளம் உயிர்ப்பு ஒன்றுதான். உயிர்ப்பு இல்லாவிட்டால் நாங்கள் ஆற்றும் விசுவாசபோதனை வீணனது என்று எடுத்தியம்புகிறார் புனித சின்னப்பர்.

இந்த உயிர்பு என்னும் அனுபவத்தை ஆதரமாக வைத்துத் தான் அப்போஸ்தலர்கள் அன்று விசுவாசத்தைக் கட்டி எழுப்பினார்கள் உயிர்ப்பைப்பற்றி எடுத்துரைத்து அந்த உயிர்ப்புக்கு தாங்களே சாட்சி என்று பகர்ந்து உபிர்ப்பு என்ற சத்தியத்திலே விசுவாச வாழ்வை கட்டி எழுப்ப முயன்றனர்.

அப்போஸ்தலர் உயிர்ப்பின் சாட்சிகள். உயிர்த்த யேசுவைக் கண்டவர்கள், தொட்டவர்கள், அனுபவித்தவர்கள், இந்த இறையனுபவம் அவர்களது விசுவாசத்தை ஆழப்படுத்தியது. அந்த விசுவாசத்திற்காக எதையும் செய்யத் தயாரானார்கள்.

உயிர்ப்பு யேசுவோடு முடிந்த தொன்றல்ல. அனைத்து மக்களும் உயிர்த்தெழுவார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டது. யேசுவின் உயிர்ப்பு விசுவாசபோதனையாகி, மக்களின் உயிர்ப்பு நம்பிக்கையாக அருளப்பட்டது. எனவே, உயிர்ப்புக்குரியவர்களாக அந்த உயிப்பின் பண்புகளோடு மக்களை வாழ அழைத்தார்கள் போதனையாளர்கள்.

## அருள்திரு. தேவதாசன்

விசுவசிக்க ஏதோ ஓர் அனுபவம் இன்றியமையாதது. அப்போஸ்தலர்கள் வெறும் கல்லறையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்கள். அந்தஅதிர்ச்சி அவர்களது அனுபவமாகியது. அந்த அதிர்ச்சி நிகழ்ச்சியைப் பார்த்து விசுவசித்தார்கள். அப்போஸ்தலர்களாக இருந்தும் அவர்கள் இறைவாக்குகளை உணராதவர்களாக இருந்தார்கள்.

நாமும் திருமுழுக்குப் பெற்று யேசுவை, அவரது சத்தியங்களை, அவரது திருச்சபையை உணராதவர்களாக இருக்கிறோமா? அவரை விசுவசிக்க அனுபவங்கள் வேண்டும். அந்த அனுபவங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளாக அமைய வேண்டும். ஆம் வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அந்த நிகழ்ச்சிகள் வெறும் நிகழ்ச்சிகளாக, சாதாரண நிகழ்ச்சிகளாக, வந்து போகும் நிகழ்ச்சிகளாக, சரித்திர நிகழ்ச்சிகளாக அமைந்து விடுகின்றன. உயிர்ப்பு ஒரு சரித்திர நிகழ்ச்சி மட்டுமல்ல. அது ஒரு சத்திய நிகழ்ச்சி, விசுவாசத்தை தூண்டுகின்ற நிகழ்ச்சி இறைவனை நினைவு படுத்தும் நிகழ்ச்சி. தமக்கு நிகழும் சாதாரண நிகழ்ச்சிகளில் சத்தியனின் கைவன்மையை, வல்ல தேவனின் மாபெரும் சக்தியை கண்டு உணர்ந்து இறைவன் ஆற்றும் செயல்களை கண்டு வியந்து விசுவாசத்தை ஆழப்படுத்த வேண்டும். ஜெபம், பிராத்தனை மட்டுமல்ல வாழ்க்கை நிகழ்ச்சிகளும் எம்மை இறைவனோடு இணைக்கின்றன.

வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஜெபமாக மாற்றுங்கள். அன்று வல்ல செயல்களை செய்த தேவன் இன்றும் செய்வார் என ''எகிப்து விடுதலை'' என்னும் வாழ்க்கை அனுபவத்தை மக்கள் ஆதாரமாகவைத்து எதிர்கால பிரார்த்தனைகளை இறைவனிடம் சமர்ப்பித்தார்கள். கண்களைத் திறந்து எமது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பார்த்து, அனுபவித்து விசுவாசத்தை ஆழப்படுத்துவோம். அந்த விசுவாசம் ஆழமாகி எம்மை உயிர்ப்பின் பாதையில் வழி நடத்திச் செல்லட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தெழுந்தார்

வெள்ளியன்று பிற்பகல் மரித்த இயேசு
வேதமுற மாலையிலே அடக்க மானுர்
கள்ளர்களும் ஓய்வெடுப்பர் சனியில் அன்று
கட்டாய விடுமுறை நாள் யூதருக்கு
பிள்ளைகளும் பெரியோரும் மாதர் தாமும்
பேதலித்துச் சனிமுழுதும் ஓய்ந்தி ருந்தார்
வெள்ளி முளைத் தேளழுந்து ஞாயி றன்று
விடிகின்ற போதினிலே குறித்தெ ழுந்தார்

அந்நேரம் கல்லறையைக் காவல் காத்த
ஆயுதம் சேர் பெருவீரர் பூமியின் மேல்
மின்னலுடன் இடிவந்து மோதிற்றே போல்
மிகப்பெரிய பூகம்பம் நிகழக் கண்டார்
பொன்னிறத்தில் ஒரு தூதன் வானைவிட்டுப்
பூமிக்கு வருவதனை அவர்கள் பார்த்தார்
அன்னவனும் கல்லறையின் கல்லை நீக்கி
அதன்மீது அவன் அமருவதையும் கண்டார்.

தூதனவர் திருவுருவம் மின்னல் போலும்
தொட்டெடுத்த உடை வெள்ளைப் பனியைப் [போலும்
நாதவடி வாகஅவன் நிற்கக் கண்டு
நடையிழந்து படைவீரர் மயங்கி வீழ்ந்தார்
மாதர்களும் வைகறையில் கல்லறைக்கு
வாசமிகும் பொருளோடும் வந்து சேர்ந்தார்
பாறைக்கல் விலகியதும் தேவ தூதன்
பக்கத்தில் இருப்பதுவும் திகைத்தே பார்த்தார்

ஆண்டவரின் திருத்தூதன் அவரைப் பார்த்து
அறையுண்டு மடிந்தவரைப் பார்க்கவந்தீர்
ஈண்டவரின் உடல் இல்லை உரைத்த வாறே
இயேசுபிரான் உயித்தெழுந்தார், இங்கே நீங்கள்
வேண்டுமெனில் சடலத்தை வைத்த அந்த
வியத்தகுந்த கல்லறையைப் பார்த்துச் செல்வீர்
காண்டகைய செய்திதன்னைக் கண்ட பின்பு
கட்டாயம் சீடரிடம் போய்ச்சொல்லுங்கள்!

எனக்கூறித் திருதூதன் முடித்தான்; வந்த
எல்லோரும் கைப்பொருளைக் கீழேபோட்டு
மனக்குமுறல் கொண்டுள்ள சீடருக்கு
மகத்தான சேதி சொல்லப் புறப்பட்டார்கள்.
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

- இயேசு காவியம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பால் வழிந்த பதியின் கானக்குயில் மறைந்தது.

ஃ ஃ ஃ

**மணிக்குரலால்** இசைஉலகின் தனி இடம் வகித்த இசைமணி சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் கடந்த மார்ச் திங்கள் 24ம் நாள் காலமானுர். மாரடைப்பால் திடீரென மரணமான இவருக்கு இறக்கும்போது வயது 55. இசையுலகில் 'ரீங்காரமிடும் குரல்வளமுடையவர்' என்று விமர்சகர்களால் குறிப்பிடப்பட்ட இசை மணி, தமிழிசை உலகில் தனியிடம் வகித்தவர். சுத்தமான தமிழ் உச்சரிப்போடு கூடிய இவரது இன்னிசைப் பாடல்கள் இசைப் பிரியர்களுக்கு தேன் விருந்து.

அடிவயிற்றிலிருந்து நாதத்தைக் கிளப்பி மேல் ஸ்தாயியில் நின்று அநாயாசமாக இவர் புரியும் அற்புத 'பிர்கா' ஜாலங்களை அலுக்காமல் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

கர்நாடக இசையுலகிலும், திரைப்படத் துறையிலும் ஒருங்கே வெற்றிநடை போட்டவர் இவர்.

சாகும்வரை குரல்வளம் குன்ருது சளைக்காமல் கச்சேரி செய்து வந்தவர். கர்நாடக இசையைத் திரைப்படங்கள் மூலமாக ரஞ்சகப்படுத்தித் தம் அற்புதமான குரல்வளத்தால் அனைவரையும் ரசிக்கச்செய்தவர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன்.

கர்ணன், கந்தன்கருணை, அகத்தியர், திருமலை தென்குமரி, ராஜராஜ சோழன் போன்ற திரைப் படங்கள் அவரது இசைத்திறனையும், ஈடில்லா குரல்வளத்தையும் எடுத்துக்காட்டும் சிலவாகும்.

குன்னக்குடி வைத்தியநாதன் இசையமைப்பில்சீர்காழி பாடிய திரைப்படப் பாடல்களும்: பக்திப் பாடல்களும் கர்நாடக - மெல்லிசைப் பிரியர்கள் அனைவரையும் ஒருங்கே கவர்ந்தவை.

கர்நாடக இசையை திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை அவர்களிடம் முறையாப் பயின்ற சீர்காழி, தமிழிசைச் சங்கம், சென்னைப் பல்கலைக் கழகம், இந்திய அரசு போன்றவற்றின் உயர் விருதுகள் பல பெற்றவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப்பிரிவின் தலைவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தவர்.

எமது இலங்கை நாடு உட்பட பல நாடுகளுக்கும் சென்று இசை முரசு கொட்டியவர்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள விபுலானந்தர் இசைக் கல்லூரியின் திறப்பு விழாவுக்கு வந்து இசைமழை பொழிந்து எம்மை எல்லாம் குளிர்வித்ததை இந்நேரம் நினைத்துப் பார்க்கின்றேம். அந்தக் கானக்குயில் இன்று கண்மூடிவிட்டதே என்று எண்ணும்போது நெஞ்சில் சோகமே நிறைந்து நிற்கிறது.

ஆயிரக்கணக்கான பக்திப் பாடல்களைப்பாடி பக்தி மணம் பரப்பிய முருக பக்தரான சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் சமய வேலிகளைக் கடந்து பிறசமயங்களுக்கும் தம் இசைப் பங்களிப்பைச் செய்துள்ளதை நாம் நன்றியோடு நினைவு கூருகின்றேம்.

'எங்கே சுமந்து போகிறீர்...' என்ற சிலுவைப் பாதைப் பாட்டைக் கேட்கும்போது நெஞ்சம் உருகவே செய்யும். அதை விட மேலாக திருச்சி கலைக்காவிரி நிலையத்தினர் தாயரித்த 'தேம்பாவணி பாடுகிறேன்' ஒலிப்பதிவு நாடா முழுக்க முழுக்க சீர்காழி கோவிந்தராஜனின் இசை வன்மையால் உருவான இசைப் பெட்டகமாகும்.

இத்தாலியத் தமிழ்ப் புலவன் வீரமாமுனிவன் இயற்றிய தேம்பாவணி நூலிலிருந்து தெரிந்தெடுத்த பாடல்களுக்கு பிரபல இசையமைப்பாளர் டி. ஆர்.

( மறுபக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பாவின் இசையமைப்பில் சீர்காழி பாடியுள்ள பாடல்கள் இலக்கிய உலகும், இசை உலகும் ஒருங்கே கொண்டாடத் தக்கவை.

இவ்வாறு நாடு, இனம், மதம் என்ற எல்லைகளைத் தாண்டி இசைப்பணி செய்த இசைமணி சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்களின் மறைவு இசை உலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

சமரசம் உலாவும் இடமே... என்ற சவக்காலைப் பாட்டைக் கேட்ட எவரும் மறந்துவிட மாட்டார்கள். அந்தத் தத்துவப் பாட்டைப் பாடிய வாய் இன்று மூடிவிட்டதே! காதினிக்கக் கானம் இசைத்த அந்தக் கட்டைக்குயில் இன்று ஓய்ந்து விட்டது!

ஆமாம்! சமரசச் சோலையில் அது சங்கமமாகி விட்டது!

தமிழிசை வரலாற்றில் தனது பெயரை ஆழப்பொறித்துவிட்டு உயரப் பறந்துவிட்டது!

— எம், வி,

## விஞ்ஞான அறிவை வளர்த்த நம் திருச்சபையினர்...

✶ சுவர்க் கடிகாரத்தைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; இரண்டாம் சில்வெஸ்டர். இவர் ஒரு பாப்பாண்டவர்.

✶ அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; குட்டென்பர்க் என்பவர்.

✶ பூமியின் சுழற்சியைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; கோப்பெர்னிக்கஸ் இவர் ஒருகுரு

✶ ஹெலிகாப்டரைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்கள்; லாச்சியெர்வா, சிகோர்ஸ்கி.

✶ டைனமோவைக் கண்டுபிடித் கத்தோலிக்கர்; காச்சிஞேத்தியா.

✶ திரைப்படக் கலையைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; லூமியெர் சகோதரர்கள்.

✶ எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; ராண்ட்கெள் என்பவர்.

✶ ஸ்டெதஸ் கோப்பைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; லாயெனக் என்பவர்.

✶ மூக்குக் கண்ணுடியைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; தெல்பீனு என்பவர்.

✶ வாஞெலியைக் கண்டுபிடித்த கத்தோலிக்கர்; மார்க்கோனி என்பவர்.

✶ ஐரோப்பாவில் பல்கலை நிறுவனங்களை நிறுவியது நம் திருச்சபையே. ... நன்றி - தோழன்.

---



# 31ம் நாள் நினைவஞ்சலி

# திரு. அல்பன் றசல் டீ ஸில்வா

மலர்வு: 1946-06-23 ✶ ✶ உதிர்வு: 1988-03-20.

எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எம் நெஞ்சைவிட்டுப் பிரியாத
அன்புருவே!
நீர் ஆண்டவன் சந்நிதியில்
நித்திய இளைப்பாற்றி அடைய
இறை அருளை இறைஞ்சுகிறோம்.

உம் பிரிவினுல் துயரும் :-
லீனு டீ ஸில்வா (தாய்)
எட்வின்சா டீ ஸில்வா (மனைவி)
பிள்ளைகள் B பிறயன், F பிளேவியா
ஜெனிட்டா, கிளாடியன்
சொப்பியா, மற்றும்
உற்றுர் - உறவினர் - நண்பர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்து உயிர்த்து விட்டாரா?

கிறிஸ்து உயிர்த்த பெருவிழாவைக் கொண்டாடினோம். அவரது உயிர்ப்பு ஒரு மாபெரும் வெற்றி. சாத்தான் மீது வெற்றி. சாவின் மீது வெற்றி. பாவத்தின் விளைவு மரணம்· ஆகவே, யேசுவின் வெற்றி பாவத்தின் மீது கொண்ட வெற்றி. ''சாவே உன் கொடுக்கு எங்கே? கல்லறையே உன் வெற்றி எங்கே? (1 கொ. 15:55) இவ் வெற்றி ஒரு மறுமலர்ச்சியை எல்லோரிடமும் தோற்றுவிக்க வேண்டும். சிறுவர் முதல் முதியோர் வரை ஏழை முதல் பணக்காரன் வரை இம் மறுமலர்ச்சி பிரதிபலிக்க வேண்டும். அவரது உயிர்ப்பு உண்மையான, பூரணமான வெற்றியாக இருக்க வேண்டுமானால் நாட்டில் அநீதி ஒழிய வேண்டும். அவர் வெற்றி பூரணமானதா? சிந்திப்போம்! நம்மைச் சுற்றி காண்பதென்ன? அநீதி, அக்கிரமம், வஞ்சம், கொலை, கொள்ளை, வன்முறைபோன்ற தீச்செயல்கள் தான் நம்மைச் சூழ்ந்துள்ளன. அநீதி எல்லாத் துறைகளிலும் புகுந்து தாண்டவமாடுகிறத. நீதி பயந்து ஓடி ஒழித்துக் கொண்டது. தற்போது நிலவும் சூழ்நிலையில் அநீதியைக் கடைபிடித்தால் தான் முன்னேற முடியும் என்ற பிழையான எண்ணம் மனிதனை ஆட்கொண்டுள்ளது. ஆகவே, அநீதி அழியும் வரை யேசு உயிர்த்தார் என்று சொல்லலாமா?

தற்போது அநீதி எல்லா சமுதாயத்தையும் ஆட்கொண்டுள்ளது. அநீதியின் ஆட்சி நிலை நாட்டப்படுமானால் நம் நாட்டின் வருங்காலம் என்ன? இயேசுவின் வெற்றிக்கு அர்த்தம் என்ன? நாட்டில் அநீதியை ஒழித்து நீதியை நாட்ட சட்டதிட்டங்கள் உதவா, எல்லாச்சட்டதிட்டங்களையும் மீறுபவர் எல்லாத் துறையிலும் உள்ளனர். அரசியல் வாதிகள் செல்வாக்கு இருக்கும் வரை சட்டங்கள் செயலற்றவையாக இருக்கும். அநீதி ஒழிய வேண்டுமானால் மக்களிடம் மனமாற்றம் தேவை. சட்டங்கள் மக்கள் உள்ளத்தில் தோன்றவேண்டும். கடவுள் தங்களிடம் ஒப்படைத்த செல்வமான மக்களை கடவுளுக்குப் பயந்த பிள்ளைகளாகவும், நாட்டின் நல்ல குடிமக்களாகவும், நேர்மையிலும், நீதியிலும் வளர்க்கும் மனமாற்றம் பெற்றோர்களுக்கு அவசியம். ஆசிரியர்களும் தங்கள் மகத்தான பணியின் பொறுப்பை உணர்ந்து மாணவர்களை நல்ல மனப்பக்குவம் உள்ளவர்களாகப் பயிற்றுவித்தால் அநீதி ஒழியும். மாணவர்களும் நாட்டிற்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையை உணர்ந்து கல்வியின் முழுப்பயனைப்பெறும் நோக்கத்துடன் செயலாற்றினால் நம்நாடு நலமுறும். தொழிலாளர்கள் மனநிறைவுடம் தாங்கள் பெறும் ஊதியத்திற்கேற்ப தங்கள் உழைப்

**- செல்வி லீமாரோஸ் பெரியநாயகம்.**

★ செல்வத்தை இழந்தால் ஒரு நஷ்டமும் இல்லை. ஆரோக்கியத்தை இழந்தால் சொற்ப நஷ்டம். தன் நடத்தையை இழந்தால் எல்லாம் நஷ்டம்.

— ஜெர்மயானிப் பழமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக் கொடுக்கும் மனமாற்றம் தேவை. முதலாளிகள் கடவுள் தங்களுக்குக் கொடுத்தபொருளைத் தன்னலங்கருதாமல் நாட்டின் நன்மைக்குச் செலவிடும் மனமாற்றமும், தங்களுக்கு அடியிலுள்ள தொழிலாளருக்கு நீதியான ஊதியத்தைக் கொடுத்து அவர்களை மனிதாபிமானத்தோடு நடத்தும் நற்பண்பையும் பெற்றிருந்தால் இயேசுவின் வெற்றி பூர்த்தியாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டை ஆளுபவர்களின் உள்ளத்தில் இயேசுவின் மறுமலர்ச்சி தோன்றினால்தான் அவர்கள் நீதியுடனும், நேர்மையுடனும், தைரியத்துடனும் அநீதியோடு போராடி நீதியோடு ஆளமுடியும் நீதியை நிலைநாட்ட முடியும். இம்மறுமலர்ச்சி ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்றுவது எப்போது? □

# சுவைக்கச் சில துளிகள்

## உண்மை...

பாதிரியார் ஒருவர் பள்ளிப் பிள்ளைகளுக்கு மறைக்கல்வி சொல்லிக்கொண்டிருந்தார்.

எல்லா மாணவர்களையும் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்

''இங்கே இதுவரை ஒரு பொய் கூட சொல்லாத மாணவன் உண்டா?,,

எல்லா மாணவர்களும் மௌனமாக நின்றனர். பாதிரியார் அமைதியாகப் பெருமூச்சு விட்டார்; பிறகு சொன்னார்,

கர்த்தரே! உமக்கு வணக்கம்! எங்கள் பிள்ளைகள் முதல் முறையாக மௌனத்தின் மூலம் ஒரேயொரு உண்மையைப் பேசியிருக்கிறார்கள்.

## ஊசியும் நூலும்...

இரு புலவர்கள் விருந்து உண்ண ஒரு இல்லத்திற்குச் சென்றார்கள். அவ் வீட்டில் ஒரு பெண்மணி அறுசுவை உணவு பரிமாறினாள். அதிலிருந்த வடையை ஒரு புலவர் பார்த்துவிட்டு, வடை ஊசியுள்ளது என்றார். மற்றொரு புலவர் ''வடையில் நூலும் வருகுது, இந்த ஊசியும், நூலும் இத் தையலுக்கே (பெண்ணுக்கே) உரியது'' என்றார்.

மனோதத்துவ நிபுணர் குருவானவர் ஒருவரை பரிசோதித்தார்:-

நிபுணர்: சுவாமி நீங்கள் தூக்கத்தில் பேசுவது உண்டா ?

குருவானவர்: இல்லை ! நான் மற்றவர்கள் தூங்கும் போதுதான் பேசுவது வழக்கம்.

## சொல்லடி

முன்பு பிரிட்டிஷ் பிரதமராக இருந்த லொயிட்ஸ் ஜோர்ஜ் 'எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் வேண்டும்' என்று கூட்டத்தில் பேசியபோது அவரைக் கேலி செய்ய விரும்பிய ஒருவன் , நரலோகத்திற்கும் வேண்டாமா?' என்று கத்தினன். ஒவ்வொருவரும் தங்கள் நாட்டிற்காகப் பரிந்து பேச வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசையும்' என்றார்.

## பெருந்தன்மை...

நாத்திகரான அறிஞர் இங்கர்சாலிடம் சில கிறீஸ்தவ நீக்ரோக்கள் வந்து கிறீஸ்தவ கோயிலின் மேற்கூரை காற்றில் விழுந்து விட்டது, அதைத் திரும்பவும் போடுவதற்குப் பணம் தேவை என்று கேட்டனர். இங்கர்சால் எதிர்ப்பு ஒன்றும் கூறாமல் அவர்கள் கேட்ட பணத்தைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையின் பாதையில்...

- சில குறிப்புக்கள் -

✶ ✶ ✶

எருசலேம் நகரில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மூன்று மணியளவில் பொதுச் சிலுவைப்பாதை நடைபெறுகிறது. இது தவிர தனியார், சிறு கூட்டங்கள் என தினமும் சிலுவையின் பாடுகளைத் தியானிக்கும் திருப்பயணிகளைக் காணலாம். வியா தொலோ ரோசா எனும் வீதியில் நாதன் யேசு நமக்காகப் பட்ட பாடுகளை நினைத்து மனம் வெதும்பும் கிறீஸ்தவர்களுக்குக் கணக்கில்லை.

இந்தப் பாடுகளின் பாதையும் சர்ச்சைக்குள்ளானதுதான். யாப்பா நுழை வாயிலுக்கு பக்கத்திலே, பிலாத்து வாழ்ந்த அரண்மனையிலிருந்துதான் இயேசு சிலுவை சுமந்தார் என்பர் சிலர். பிலாத்துவின் தலைமைப்பீடம் செசாரியாவில் இருந்தது. திருவிழாக் காலங்களில் மட்டும்தான் அவர் எருசலேமுக்கு வந்து அந்தோனியா அரண்மனையில் தங்குகிறார். எனவே அங்கிருந்துதான் பாடுகளின் பாதை துவங்கியது என்பர் வேறு சிலர்.

இந்த விஷயத்தில் வரலாறுகளை எழுதிய பேனா முனைகளையும், அகழ் ஆராய்ச்சி நடத்தும் மண்வெட்டிகளின் கூர்முனைகளையும் விட, நமக்குக் கைகொடுத்து விசுவாசத்தை வளர்ப்பது வாய்மொழி மரபுதான். கி. பின் 333ம் ஆண்டில் இங்கு வந்த திருப்பயணியாளர் அந்தோணியா, அரண்மனை இருந்த இடத்தில் இன்று நாம் காணும் கல்தளம்தான் ஆதிக்கிறீஸ்தவர்களால் பாதுகாக்கப்பட்ட கல்தளம் என்கிறார்

---

✶ இறைவனை அடைய ஒரே பாதைதான் உண்டு. அதுதான் பணிவு. மற்றப் பாதைகள் வேறிடங்களுக்குக் கொண்டுபோய் விடும்.

... பாய்லியோ.

சிலுவைப்போர் வீரர்கள் காலத்தில், கல்தளம் இருந்த இடம் தெரியாமல் தவித்தனர். 1172ம் ஆண்டுக்குப் பிறகுதான் இன்று நாம் காணும் கல்தளமே யேசு தீர்ப்பிடப்பட்ட இடம் என்பது உறுதியாகியது. அதன் பின்பு பாடுகளை பாதையில் மக்கள் தியானிக்கத் தொடங்கினர்.

இயேசுவின் காலத்தில் விளங்கிய மலையின் ஏற்றத் தாழ்வுகளை இன்று நாம் காணமுடியாது இரண்டாயிரம் ஆண்டுகள் இங்கு நடைபெற்ற நூற்றுக்கனக்கான போர்களின் அழிவுகள் குவிந்து, எருசலேம் நகரின் தரை மட்டம் பதினைந்து அடிக்குமேலே உயர்ந்திருக்கின்றது.

கல்லும் முள்ளும் நிறைந்திருந்த இப்பாதைகளை அராபிய கிறீஸ்தவர்களின் துணையோடு இஸ்ரேலியர்கள் திருத்தினர். இன்று பாடுகளின் பாதை அழகிய வெண்மை நிற செவ்வகக் கற்களால் பரவப்பட்ட பாதை. ஒவ்வொரு தலத்திற்கு முன்னால் பல நிறக் கற்களால் அரைவட்ட வடிவில் தனிப்பட்ட அழகு கூட்டியிருக்கின்றனர்.

இனி, கல்வாரி மலையைப் பார்ப்போம். 'குல்கொலத்' என்ற எபிரேயச் சொல்லின் மருவே அரமெய்க் மொழியில் 'கொல்கொத்தா' எனப்பட்டது. இதன் பொருள் மண்டை ஓடு என்பதாகும். மண்டை ஓடு என்பதை இலத்தின் மொழியில் 'கல்வா' என்றனர். அதிலிருந்தே கல்வாரி என்ற பெயர் எழுந்தது.

இயேசுவின் சிலுவை நாட்டப்பட்ட இடத்தையும், அதைச் சுற்றியுள்ள இடங்களையும் 'கொல் கொத்தா' என்றே அழைத்தனர். இப்பெயர் எழுந்ததற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

(மறுபக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கண்ணியமான புகழுக்கு எது வழி என்று சாக்கிரடீசிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:- ''நீ வெளியே எப்படித் தோன்ற விரும்புகின்றாயோ அப்படியே ஆகிவிடப் பயிற்சி செய்'' என்று கூறினாராம்.

---

இயேசு மரித்து, உயிர்த்த கொல் கொாத்த எனும் குன்றை கிறீஸ்தவர்கள் மிகவும் புனித இடமாகக் கருதினர். இங்கிருந்துதான் கிறீஸ்தவ விசுவாசம் வற்றாத ஊற்றாகப் பெருக்கெடுத்திருக்கவேண்டும்.

கல்வாரி குன்றின்மேல் எத்தியோப்பிய நாட்டைச்சேர்ந்த 'கோப்டிக்' கிறீஸ்தவ துறவிகள் வாழ்கின்றனர். எளிமைக்கு ஓர் உதாரணமாக வாழும் இவர்கள் களிமண் வீடுகளில் வாசம் செய்கின்றனர். மேசைகளோ, நாற்காளிகளோ, கட்டில்களோ இவர்களிடம் இல்லை மேலை நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கிறீஸ்தவ பழக்க வழக்கங்களால் கறைபடாதவர்கள் இத்துறவிகள்.

கொன்ஸ்டன் டைன் மன்னர் இங்கு ஆலயம் ஒன்றை எழுப்பினர். ஆனல் இது 614ம் ஆண்டில் அழிக்கப்பட்டது. மீண்டும் கட்டி எழுப்பப்பட்ட ஆலயங்களும் போரினுலும், தீயினுலும் அழிந்தன. 1950க்குப்பின் அப்போது இங்கு அதிகாரம் செலுத்திய யோர்தான் அரசு எல்லாக் கிறிஸ்தவ சபைகளின் ஒத்துழைப்போடும் தற்போதுள்ள கல்வாரிக் கோயில் கட்டப்பட்டது. இன்று இக்கோவிலில் ஆறு கிறீஸ்தவப் பிரிவினருக்கு பங்கு உள்ளது. கத்தோலிக்கர், அர்மீனியர், கிரேக்கர் ஆகிய மூவரும் கோயிலில் பெரும் பங்கை நிர்வகிக்கின்றனர். இவர்கள் தங்குமிடங்களும் கோவிலின் உள்ளேயே உள்ளன. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வழிபாட்டுக் கூடங்களும், கல்வாரியிலும் கல்லறையிலும் பிற சபைகளுக்கு இடஞ்சல் இல்லாத வகையில் வழிபாடு நடத்த நேரமும் குறிக்கப்பட்டுள்ளன.

**அருள்திரு. சுந்தரிசன் எழுதிய கட்டுரையிலிருந்து.**

# பாலையூற்றுப் பங்கிலே வினு - விடைப் போட்டி!

ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் அடிகளாரது வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்ட வினு - விடைப் போட்டி, கடந்த 27-2-88 சனிக்கிழமை பாலையூற்றுப் பங்கிலே பங்குத் தந்தையின் அனுசரணையுடன் பங்கின் மறையாசிரியர்களால் நடாத்தப்பட்டது.

யோசேவாஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாறு - சிறப்பாக இலங்கை நாட்டில் அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகள் ஆதியனவற்றை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதே போட்டியின் முக்கிய நோக்கமாகும். அன்று (95) (தொன்னூற்றைந்து) மறைக் கல்வி மாணவ, மாணவியர்கள், (போட்டியாளர்களாகவும், பார்வையாளர்களாகவும், கலந்து கொண்டார்கள்.

வயதிற்கேற்ப மூன்று பிரிவுகளாக வினு விடைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டது.

பங்குத்தந்தை அருட்திரு. கிறிஸ்ரி அடிகளார் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம் முதற் கொண்டு - திருச்சபைக்கு இலங்கையில் ஏற்பட்ட இன்னல்கள்; இடஞ்சல்களையும் யோசேவாஸ் அடிகளார் வருகை தந்து அவர் ஆற்றிய அளப்பரிய ஆன்மீகப்பணிகளையும், அதனல் கத்தோவிக்க சமய வளர்ச்சிகளையும் விளக்கமாக எடுத்துக் கூறினர்கள். மேலும், அடிகளாரைப் புனிதர்களின் வரிசையில் சேர்த்தருள எல்லோரும் மன்றாட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்கள்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவ, மாணவியர்கட்குப் பரிசுகளையும், பங்குத் தந்தை அன்பளித்தார்கள். ஈற்றில் இறை வணக்கத்துடன் நிகழ்ச்சி இனிதே முடிவெய்தியது.

**மறையாசிரியர்கள்**
பாலையூற்றுப் பங்கு,
பாலையூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவங்கள் பொய்ப்பதில்லை

அடிவாரம் மலைமுகட்டைத் தொடுவதில்லை
அழகில்லா ஓவியங்கள் கவர்வதில்லை
மிடிமையுற்றோர் வாழ்க்கையிலே இன்பமில்லை
மீட்டாத வீணையிலே நாதமில்லை
குடிகாரன் பேச்செல்லாம் அர்த்தமில்லை
குழந்தையில்லாப் பெண்மையிலே முழுமையில்லை
அடிமையுற்றோர் வாழ்க்கையிலே மலர்ச்சியில்லை
அகத்திலிருள் கொண்டுள்ளோர் மனிதரில்லை.

வாய்மையற்றோர் போதனைகள் வாழ்வதில்லை
வற்றாத கடலலைகள் ஓய்வதில்லை
தாயன்புக் கிணையாக வேறொன்றில்லை
தனித்த மரம் மாலையென ஆவதில்லை
சாய்பொழுதில் தாமரைகள் பூப்பதில்லை
சாக்கடையில் தேனீர்கள் மொய்ப்பதில்லை
நாய் என்றும் நன்றியினை மறப்பதில்லை
நாகத்தின் பல்தேனைச் சொரிவதில்லை.

தங்கங்கள் கரியாகிப் போவதில்லை
தத்துவங்கள் தரணியிலே பொய்ப்பதில்லை
சிங்கத்தை சிறுநரிகள் வெல்வதில்லை
செத்தாலும் புலி புல்லைத் தின்பதில்லை
மங்கையர்கள் கற்பிழந்தால் மானமில்லை
மதியொளியோ ஒருபோதும் சுடுவதில்லை
தெங்கிளநீர் உப்பாகிப் போவதில்லை
தேசத்தில் ஒற்றுமைபோல் உயர்வொன்றில்லை.

- நிலாதமிழின்தாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பு

## சிறுகதை

எதிர்பார்த்திருந்த பணம் மணியோடரில் வந்துவிட்டது. தீபனின் இதயம் புளகாங்கிதத்தில் மிதந்தது. தன் மனைவி தீபாவிடமிருந்தே இப் பணம் காசுக்கட்டளையில் தீபனுக்கு வந்திருந்தது. எதிர்வரும் 10ந் திகதிக்கு முன்னதாக எப்படியாவது 500 ரூபா தனக்கு அவசரமாக அனுப்பி வைக்க வேண்டும் என்று தன் மனைவிக்கு ஓர் கடிதம் போட்டிருந்தான் தீபன். தனது அலுவலகத்தில், தனது மேலதிகாரியிடம் கடந்த 28ந் திகதி 500 ரூபா கடனாகப் பெற்று சிற்றுண்டிச்சாலை முதலாளிக்குச் செலுத்த வேண்டிய 500யும் கொடுத்துவிட்டான். ஒவ்வொரு மாதமும் சம்பளம் எடுத்த இரண்டொரு தினங்களில் இந்த கடைக் கணக்கை முடித்து விடுவான் தீபன். அப்படியான கண்டிப்பான - கண்டிஷன் பேரிலேயே தான் தமது வாடிக்கையாளர்கள் அனைவருடனும் நடந்து கொள்வார்கள் அந்த முதலாளிமார். குறித்த தவணை பிந்திவிட்டால்: 'கன்னா பின்னா' என்று பேசும் சுபாவம் அவர்களுக்கு. இதனால் தீபன் மட்டுமல்ல அந்தக் கடை வாடிக்கையாளர்கள் அனைவருமே எப்பாடுபட்டாவது கணக்கை மாதாமாதம் தப்பாது முடித்து விடுவார்கள்; முடித்துவிட வேண்டும்.

உண்மையில் தீபன் பெறும் வேதனம் இந்தக்கடைக்கணக்குகளையும் செலுத்தி, மனைவி தீபாவுக்கு 700 ரூபா அனுப்பி, போக்குவரத்து-வாடகை ஆகியவற்றுக்கு 300ரூபாவையும் வைத்துக்கொண்டு சமாளிக்க முடியும் அப்படித்தான் கடந்த இரண்டு வருடங்களாகச் சமாளித்து வந்தான் தீபன். ஆனால் துர்ரதிஷ்டவசமாக போன மாதம் 27ந் திகதி என்றுமில்லாதவாறு ரூபா 500ஐ கைநழுவ விட்டுவிட்டான் தீபன். கணக்கைத் தீர்க்க வந்தவனிடம் கணக்கே பிழைத்து; நிலையைச் சிக்கலாக்கி விட்டது. அவனது கொழும்பு வாழ்க்கையில் இது ஒரு கசப்பான சம்பவமாகும். மிகவும் எச்சரிக்கையான பேர்வழி தீபன்; எப்படி இந்த நோட்டை கை நழுவ விட்டான்? ஆனைக்கும் அடி சறுக்கும் என்பார்கள்; சறுக்கி விட்டது.

காசுக் கட்டளையைப் பெற்றதும் தீபன்; தனக்கு இக்கட்டான வேளையில் உதவாத 'உற்ற' நண்பர்களிடம் மிகுந்த சந்தோஷத்துடன் காட்டினான். அவர்களுக்கு அதை வேண்டுமென்றுதான் காட்டினான் தீபன். ஏனென்றால், தீபன் மேலதிகாரியிடம் வெட்கத்தை விட்டு கேட்குமுன் சக நண்பர்களிடம்தானே கடன் கேட்டான். இவர்களில் எவனாவது தீபனின் நிலைக்காக இரங்கவில்லை. வசதியுள்ள நண்பர்கள் கூட தீபனின் நிலைக்காக இரங்க 'வசதியில்லை' என்றுதான் கை விரித்தார்கள். தீபனுக்கு இவர்கள் கை விரித்தபோது திருக்குறள் ஒன்று தான் நினைவுக்கு வந்தது; நட்புக்கு இலக்கணம் கூறும் அந்தக்குறள் இது தான் —

'' உடுக்கை இழந்தவன்
கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு ''

இதை எங்கே அவர்கள் படித்திருக்கப்போகிறார்கள். 'குதிரை ஓடி' தகமைபெற்ற 'குமாஸ்தாக்கள்' தானே அவர்கள். தீபனுக்கு அவர்கள் அறிவு-ஆற்றல் நன்றாகத் தெரியும்.

தீபன் காசுக் கட்டளையைப் பணமாக்கி மேலதிகாரியிடம் கொடுத்து நன்றியும் கூறிவிட்டு;




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கதிரையில் வந்தமர்ந்து கொண்டு ஏதோ ஒரு சுமை நெஞ்சத்திலிருந்து இறங்கியது போன்ற சுகத்தில் மிதந்தான். தீபாவின் செயலை - அவள் பணம் உரிய நேரத்தில் அனுப்பியதை எண்ணியெண்ணிப் பெருமைப் பட்ட தீபனுக்கு அவள் மீது ஆசைபெருக்கெடுத்தது. அவளது முகம் அவன் நினைவில் நிழலாடியது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தான் அவனது ஊரான அக்கரைப்பற்றுக்கு அதாவது அவனுடைய வீட்டுக்கு வருவது வழக்கம். அப்படி அவர்களுக்குள் உடன்பாடு. பொருளாதாரக் கண்ணோட்டமும் - பாதுகாப்புமே அதற்கு முக்கிய காரணிகள். தான் அவசரமாகக் கேட்டபடி தீபா பணம் அனுப்பியதற்கான நன்றியைத் தெரிவிக்கத் துடியாய்த் துடித்தது தீபனின் மனம். எப்படியோ தீபனுக்கு இந்த மாதச் சம்பளத்தோடு தான் ஊருக்குத் திரும்பும் முறை. தீபன் அப்போது தீபா மீது தனது நெஞ்சப் பொய்கையில் தேக்கி வைத்துள்ள ஆசையூற்றைப் பாய விட்டு மகிழ்வான்...! தனது மானத்தை, கௌரவத்தை உரிய நேரத்தில் காத்த உத்தமியல்லவா அவள்...! தீபனுக்கு தீபாமீது வைத்த அன்பு அவனது நெஞ்சமெல்லாம் வியாபித்திருந்தது.

அன்றைய புதினப்பத்திரிகையைப் பார்க்கும் வேளை வந்தது தீபனின் கண்கள் அந்தச் செய்தியை மொய்த்தன. ''பாதுகாப்புப்படையினரின் தேடுதல் வேட்டையின் போது பயங்கரவாதிகள் மூவர் கொல்லப்பட்டனர்'' தீபனுக்கு செய்தியை வாசித்ததும் அதிர்ச்சியாக இருந்தது.

தீபனால் மேற்கொண்டு பத்திரிகையைப் பார்க்க மனம் வரவேயில்லை.

இதுவரைக்கும் தனது ஊருக்கு வெளியே எங்கெங்கேவெல்லாம் நடந்ததாகப் படித்து வேதனை கொண்ட அகிம்சாவாதியான தீபனுக்கு தன் ஊரில்... என்றதுமே அதிர்ச்சியும் வேதனையும் குடைந்தெடுத்தன. தன் ஊரில் என்றால் யார்? யாரோ? நண்பர்களோ? உற்றாரோ? உறவினரோ? - தீபனின் இதயம் பலமாக அடித்துக் கொண்டது.



□ இப்படியே தமிழினத்தின் இளம் பயிர்கள் அழிந்தொழிந்தால்...... தமிழ்த் தாய் நிர்க்கதி ஆகி விடுவாளோ!

□ ஜீவகாருண்யம் போதிக்கும் பௌத்த மத ஆட்சியிலா தர்மதுவீபத்திலா - இத்தகைய கொடூரங்கள்? மனித வேட்டைகள்?

□ உயிர்களை மதித்து; பாதுகாக்கும் உன்னத - உயர்ந்த அகிம்ஷா நிலை; இங்கு என்றுதான் உருவாகுமோ?

தீபனின் இதயம் குமிறியது. சற்று வேளைக்கு முன்புதான் தீபன் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தான் இப்போது ஏதோ குடியே மூழ்கி விட்டது போல் கவலையுடன் இருந்தான்.

அவன் தனது மனக்குமுறலை உற்ற நண்பனான மணியிடம் எடுத்துக் கொட்டினான். தீபன்; தவிர்க்க முடியாத தர்மயுத்தம் நம் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமது பண்பாட்டின் மூலாதாரமாக அகிம்சையை - தார்மீகத்தை ஏற்றுக் கொண்ட இரண்டு இனங்கள் தான் மோதிக்கொள்கின்றன. யாருக்கு யார் புத்தி புகட்டுவது? ஆனால் இதனால் ஏற்படுகின்ற உயிர் இழப்புகளை ஈடு செய்வது என்பதுதான் வில்லங்கமான காரியம். கடவுள் தான் தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும். மணி இவ்வாறு பெரிய விஷயத்தைப் பெரிய மனுஷன்போல சில வார்த்தைகளில் கூறிச் சென்று விட்டான். தீபனது மூளையில் அவன் இறுதியாகச் சொன்ன 'உயிர் இழப்பை ஈடுசெய்வது... என்ற வரி வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. — ஓர் உயிர் சாகும்போது; ஓர் உயிர் பிறக்க வேண்டும் — இதுவா மணி கூறியதின் உள்நோக்கம்? அப்படியானால்; நாம் இழந்து கொண்டிருப்பது ஆண்பிள்ளைகளையல்லவா; ஒரு ஆண்பிள்ளை சாகும்போது ஒரு பெண்பிள்ளை பிறந்தால் இழப்புக்கு ஈடாகுமா? முடியாது... முடியவே முடியாது; தீபனின் உள்ளத்தில் போராட்டம் நடந்து கொண்டே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பெண்பிள்ளைகளுக்கு தந்தை தீபன். ஆண்பிள்ளை இல்லையே என்ற கவலையில் வாழ்ந்து கொண்டிருப்பவன். இனிப் பிறப்பதும் பெண்ணுகவே இருக்கும் என்ற பயத்தினுல்; குழந்தை பெறும் நோக்கத்தையே இருவரும் கைவிட்டு விட்டார்கள். இப்படி இவர்கள் தீர்மானம் எடுத்து ஏறக்குறைய நான்கு வருடங்கள் ஆகிவிட்டது.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்பு இப்போது தீபனின் உள்ளத்தில் புதிய ஆசை - புதிய உணர்வு புதிய ஆவேசம் உருவாகிவிட்டது. மணியினுடைய வார்த்தை தீபனுக்கு புதிய இரத்தத்தை ஏற்றிவிட்டது. ஆம் அந்த உத்வேகவுணர்வு வேறு ஒன்றுமில்லை. ஏற்கனவே அவனும் அவனது மனைவியும் பிள்ளை பெறுவதில்லை என்று செய்துகொண்ட தீர்மானத்தை - முடிவை தகர்ப்பது; ஆண் குழந்தை ஒன்றுக்கு அத்திவாரம் இடுவது, நேர்த்திக் கடன்கள் வைத்தாவது ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்து இழப்புக்கீடாக எங்களது பங்களிப்பாக தமிழ்த் தாய்க்கு வழங்குவது - இதுவே தீபனின் உள்ளத்தில் முட்டி மோதும் புதிய இரத்தத்தின் சுருதியாக இருந்தது.

இந்த ஆசையை, புதிய முடிவவை; தன் ஆசை மனைவியிடம் வெளியிடும் நாளை ஆவலோடு எண்ணிக் கொண்டிருந்தான் தீபன்.

இன்னும் இரண்டேயிரண்டு கிழமைதான் இருந்தன. ஆனுல் அதற்குள் ஒரு கிழமை கழித்து ஊரில் தன் மனைவியிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது தீபனுக்கு;

உடனே அதை துள்ளத் துடிப்போடு பிரித்துப்பார்க்க ஆரம்பித்தான் தீபன்;

"தீபகம்"
அக்கரைப்பற்று
07-04-1987.

ஆருயிர் அத்தானுக்கு;

முதலில் என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். பயப்படாதீர்கள் அப்படியொரு தவறும் நடந்துவிடவில்லை. ஒரு சிறு 'ஆப்றேஷன்' செய்து இப்போது குணமடைந்து வீட்டில் இருக்கிறேன். 'என்ன ஆப்ரேஷன் என்று கேட்கிறீர்களா? நீங்கள் பணம் அவசரமாக வேண்டும் என்று கடிதம் போட்டிருந்தீர்கள். நமது லதாவிடமும், அமரா, தம்பர் ஆகியோரிடமும் வட்டிக்குப் பணம் கேட்டேன். நேற்று வந்திருக்கலாம் - முந்த நாள் வந்திருக்களாம் என்று இழுத்தார்கள். அடுத்த வீட்டு லெட்சுமியிடம் கேட்டேன். அவள் ஒரு உபாயம் சொன்னுள் குடும்பக் கட்டுப்பாட்டு ஆப்றேஷன் செய்துகொண்டால் ரூபா 500 கிடைக்கும் என்றுள். அவளும் அவ்விதமே செய்ததாகச் சொன்னுள். தவிர; நமக்குப் பிறப்பதெல்லாம் பெண்கள் தானே அத்தான்! நமக்குள் இனிப்பிள்ளை வேண்டாம் எனற தீர்மானமும் இருப்பதால் நீங்கள் கண்டிக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் உங்கள் அனுமதி இன்றியே இதனைச் செய்து விட்டேன்.

என் அத்தான் என்னை எப்படியும் மன்னிப்பாரென்று நம்பி உங்கள் வரவை ஆசையோடு எதிர்பார்க்கும்;

— அன்பு மனைவி தீபா.

K. W. மனோ
அக்கரைப்பற்று.

தீபனுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவனது தலை சுற்றியது. இதயம் படபடவென்று அடிக்கத் தொடங்கியது. உடம்பெல்லாம் ஊசியால் குத்துவது போன்ற பிரமை. பனித்திவலைகள்போல் வியர்வைத் துளிகள் முகமெல்லாம் அரும்பின. தீபன் தனது மேசைக்கருகில் இருந்த பில்டரில் இருந்து தண்ணீர் எடுத்து மடக் மடக்கென்று குடித்தான். முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத்துடைத்து விட்டான். அவன் சற்றும் எதிர்பாராத அதிர்ச்சிச் செய்தியல்லவா இது.

தீபாவின் கடிதத்தை மீண்டும் மீண்டும் பார்த்தான். தீபனின் மூளை இப்போது நிதான நிலைக்குத்திரும்பியது. தீபா மீது எழுந்த ஆத்திரம் அனுதாபமாக விரிந்தது. தீபனது மனம் பிரலாபிக்கத் தொடங்கியது.

ஓ எனதன்பே! தீபா! இழக்கக்கூடாததை இழந்து விட்டாயே! உயிரிழப்புக்கு ஈடுசெய்திட ஒரு இலட்சியத்தை நான் உருவாக்கிய வேளையில் நீ உன்னிடம் இருந்ததைய இழந்து விட்டாயே தீபா! இனி என்ன செய்வேன்? ஆண்டவா இது என்ன சோதனை?


தீபனின் கண்கள் பனிக்கத் தொடங்கின. தீபாவின் தியாக செயலை எண்ணிப் பெருமையடைந்த கண்களில் பனித்தநீர் வேறு ஒன்றுமில்லை... ஆனந்தக் கண்ணீர்!! ஆனந்தக்கண்ணீர்!!!

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் அந்த ஜோதி?



அகஸ்தியர் பாடிய ஜோதி யார் ?

கௌதமர் கூறிய ஜோதி யார் ?

திருமூலர் வெளிப்படுத்திய ஜோதி யார்?

ரிக்வேதம் போதித்த ஜோதி யார் ?

சாமவேதம் போதித்த ஜோதி யார்?

சிவ வாக்கியர் பாடிய ஜோதி யார்?

உபநிடதத்தில் காணப்பட்ட பலி யார் ?

திருமந்திரம் உபதேசித்த குரு யார்?

ஒருவராய் அதே சமயம் மூவராய் காண்பித்த தெய்வம் யார் ?

சாவாமை உடையவராய் பலியாக்கப்பட்ட பின்பும் உயிரோடிருந்த தெய்வம் யார் ?

மனித ஆத்மாவை விடுவிப்பதற்காகத் தம்மையே பலியாக்கிய விஸ்வகர்மாவாகிய பிரஜாபதி யார் ?

பரிசுத்த குரு யார் ?

யார் ஜோதி ? யார் குரு ? யார் தெய்வம் ? என்றெல்லாம் பல கேள்விகள் கேட்கப் படுகின்றது. இதற்கு விடை எந்த மதத்தில் உள்ளது? யாரைப்பற்றி கூறுகின்றார்கள் ?

பிரணவத்தைக் குறித்து சொல்லப்பட்ட வாக்கியத்தை சற்று சிந்தித்தால் எல்லாம் புலப்படும்.

“ ஒருவராய்

சாவாமையுள்ளவராய்

அழகராய்

ஆதியந்தமுடையவராய்

இரச்சகராய்

பலியாய்

பாவத்தை அழிப்பவராய்

மலைகள் மீது நிற்பவராய்

நீதியின் செங்கோல் பிடித்தவராய்

விண்ணையும் மண்ணையும் தமக்குள் அடங்குகின்றவராய் ”

இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரணவத்திற்கு பதில் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

**ஒருவராய் :-**

'' என்னையன்றி உனக்கு வேறு தெய்வங்கள் உண்டாயிருக்க வேண்டாம் ''
( யாத் : 20: 3-6 )

**சாவாமையுள்ளவராய் :-**

'' உயிரோடு இருக்கின்றவரை நீங்கள் மரித்தோரிடம் தேடுவது என்? அவர் இங்கே இல்லை. உயிர்த்தெழுந்தார்·
( லூக். 24: 5-6 )

**அழகராய் :-**

'' என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர். பதினாயிரம் பேர்களில் சிறந்தவர். அவர் முற்றிலும் அழகுள்ளவர்.''
( சங். 5: 10-16 )

**ஆதியந்தமுடையவராய் :-**

'' நான் அல்பாவும் ஓமேகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கின்றேன் ''
( வெளி 1: 8 )

**இரட்சகராய் :-**

'' யேசுவாலன்றி இரட்சிப்பு இல்லை ''
( அப். 4: 12 )

**பலியாய் :-**

'' கிறிஸ்து தம்மைப் பலியாய் ஒப்புக் கொடுத்தார்,
( எபே, 5:2 26:27 )

**மலைகளின்மீது நிற்பவராய் :-**

'' கபாலஸ்தலம் என்று அர்த்தம் கொள்ளும் கொல் கொத்தா என்னும் இடத்துக்கு என்னை கொண்டுவந்தார்கள்.''
( மத். 27: 33 )

**நீதியின் செங்கோல் பிடித்தவராய் :-**

'' இரும்புக் கோலால் அவர்களை அரசனுவர். ( வெளி. 10: 15 )

**விண்ணையும் மண்ணையும் தனக்குள் ஆக்குபவராய் :-**

'' பரலோகமும் பூலோகமும் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவேண்டும்.
( எபெ : 8 )

## - மட்டுநகர் ஆனந்தன் -

என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டவர் யார் ?

**தணிகைப் புராணம் என்ன கூறுகின்றது -**

தனக்குத்தானே மகனுகிய தத்துவன்
தனக்குத்தானே ஒரு தாவருங் குருவாய்
தனக்குத்தானே அருள் தத்துவம் கேட்டதும்
தனக்குத்தான் நிகரினுள் தழங்கி நின்ருடினுள்.

**மாணிக்கவாசகர் என்ன கூறுகின்ருர்-**

'' அறுபரத் தொருவரன் அவனியில் வந்து குருபரனுகி அருளிய பெருமையை சிறுமை என்றெண்ணி இகழாதே......''

**வேதநாயகம் சாஸ்திரியார் என்ன கூறுகின்ருர்-**

'' ஓம் அனுதி தந்தார் வந்தார் இறந்துயிர்த்
தெழுந்தாரே
உன்னதமே ஆமென் அல்லேலூயா
மகத்துவம் தம்பராபரா ''

இவை எல்லாம் யாரைக் குறிக்கின்றது? இவர்கள் கூறிய ஜோதி யார்? மேற் குறிப்பிட்ட கூற்றுக்களிலும் ஆதாரங்களிலும் இருந்து அன்புத் தெய்வம். அண்ணல் இரட்சகர், இருளின் ஒளி, வாழுமுன் வரலாறு படைத்த யேசுவே இந்த ஜோதி என்பது எல்லாருக்கும் தெரிய வருகின்றது.

✶ துயரைக் கண்டு இரங்குதல் மனித சுபாவம். அதை நீக்குதல் தெய்வீகமாகும்.

— ஏ. மான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தத்தில் பத்திரிகை இருந்துவிட்டால்....!

செ. குணரத்தினம்

என்கருத்தை எல்லோரும் ஏற்கவேண்டும்
எதிர்ப்பவரை நானெழுதித் தாக்கவேண்டும்
என்னெதிரில் எழுத்தாளன், கவிஞனென்று
எவன்புகழை அடைந்தாலும் எதிர்க்கவேண்டும்
என்மனதைப் போட்டாட்டும் புகைச்சல் தன்னை
எடுத்துவைத்து மனம்குளிரச் சிரிக்கவேண்டும்
என்னைவிட்டால் இலக்கியத்தை வளர்ப்பதற்கு
இங்கெவரும் இல்லையென்று குதிக்கவேண்டும் !

வளர்ந்து வரும் கவிஞர்களை மட்டம்தட்டி
வாழுகின்ற போதவரைக் கிழிக்கவேண்டும்
வளம் பொங்கும் இந்நாட்டில் வாழ்ந்து கொண்டே
வரட்சியுற்ற நாடிதென்று மொழிதல் வேண்டும் !
உளம் நீதி சொன்னாலும் அதை வெறுத்து
ஊருக்குப் ' பம் ' மாத்துக் காட்ட வேண்டும் !
பழுத்தவர்கள் பலரிருக்க பிஞ்சு நானே
பழமென்று ஊர்மெச்சப் புழுக வேண்டும் !

வயல், காணி மேடுமலை பள்ளமெல்லாம்
வாழ்பவர்கள் எனைப்போற்றித் துதிக்கவேண்டும்
அயல் வீட்டான் முற்றத்தில் பூத்திருக்கும்
அழகான மல்லிகையில் மணமேயில்லை
உயர்வெனது கருத்துகளே; கட்டுரையை
உடைத்து நான் எழுதுவதே கவிதையென்று
பயமின்றி நானெழுதிக் குவிப்பதற்கோர்
பத்திரிகை சொந்தத்தில் இருக்க வேண்டும் !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய குரு

# அருள்திரு. ஆஞ்சலோ

# அவர்கள்



கடந்த ஏப்ரல் திங்கள் 27ம் நாள் அருள் திரு. ஆஞ்சலோ பொன்னையா அவர்கள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

மட்டக்களப்பு - புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடந்தேறிய இத் திருச் சடங்கை திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் நிறைவேற்றிவைத்தார்.

திருச்சபையின் வரலாற்றில் பல சாதனைகள் படைத்த உலகளாவிய இயேசு சபையில் இணைந்துள்ள புதிய குருவான ஆஞ்சலோ பொன்னையா அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. திருமதி ஏ. ஆர். பொன்னையா அவர்களின் புதல்வனாவார்.

1950ம் ஆண்டு பிறந்த இவர் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கல்வியை முடித்துக் கொண்டபின் மட்டக்களப்புக் கச்சேரியில் ஏழு ஆண்டுகள் எழுதுவினைஞராகப் பணியாற்றினார்.

1975ம் ஆண்டு இயேசு சபையில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் நவ சந்நியாசத்திலும், இரண்டு ஆண்டுகள் இளந்துறவறத்திலும் கழித்த பின் 1979ம் ஆண்டு சென்னையிலுள்ள சத்திய நிலையத்தில் மெய்யியற் படிப்பை மேற்கொண்டார்.

டெல்லியிலுள்ள விஜய ஜோதியில் நான்கு ஆண்டுகள் இறையியல் பயின்ற ஆஞ்சலோ அவர்கள் ஓர் இளங்கலைப் (B.A.) பட்டதாரியுங்கூட.

திருகோணமலையில் உள்ள புனித யோசப் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இறைவனின் தோட்டத்தில் பணி செய்யப் புகுந்துள்ள இயேசு சபைக் குருவான அருள்திரு ஆஞ்சலோ பொன்னையா அவர்கள், கிறிஸ்துவின் நல்ல பணியாளனாக விளங்க வாழ்த்துகிறோம்; இறைஆசீர் இறைஞ்சுகிறோம்.

---

அடுத்த இதழில் ஆரம்பம்!

கோகிலா மகேந்திரன் எழுதும்...

**சந்தனச் சிதறல்கள்** - தொடர் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -: அஞ்சலி :-

இரண்டொரு நாட்களாக ஏதோ இனம்புரியாத சோர்வு உடலை வருத்திக்கொண்டிருந்தது. சென்ற புயலின்போது சரிந்தும் சரியாமல் ஏதோ தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்து இன்றும் இரண்டொரு காய்களுடன் பெருமையாக நிற்கின்ற அந்த மாமரத்தடியில் போய் இருக்கின்றேன். வழமையாக அங்கு விளையாட வருகின்ற சிறுவர்களின் கலகலப்பில் என் மனதிற்கு ஆறுதல் தென்படுகின்றது. நேரத்தைப் பார்க்கிறேன் பன்னிரெண்டாகி விட்டது. அல்போன்ஸ், அவன்தான் கோயில் வேலைகளைக் கவனிக்கின்ற பெடியன். திருந்தாதி அடிக்கின்றான். சிறுவர்களின் ஆரவாரம் அடங்கி அமைதி நிலவுகின்றது. அந்த மணியோசையுடன் சேர்ந்து அந்த ஒட்டல் நாய் ஊளை இடுகின்றது. வழமையாக அந்த நாய்க்கு மணிச்சத்தம் கேட்டு விட்டால் ஊளைஇடத்தொடங்கி விடும். பரிதாபமான அந்த ஊளைச் சத்தத்துடன் என் மனதிலே மறைந்து கிடந்த இனம் புரியாத சோர்வு மெல்லத் தலை நிமிரத் தொடங்கிவிட்டது. இருந்தாலும் மணியோசை அடித்து ஓய்ந்தவுடன் சிறுவர்களின் கலகலப்பும் தொடங்கி விடவே என் உணர்வுகளுக்கு அது ஒரு திரையாக அமைந்து விடுகின்றது. இன்னும் பத்து நிமிடத்தில் அந்தச் சிறுவர்களை சாப்பாட்டிற்காக வீடுகளுக்கு அனுப்ப வென்று எண்ணிக் கொண்டிருந்த போது தான் தபாற் கந்தோரில் வேலை செய்கின்ற ஆனந்தன் வந்தார். அவரது முகத்திலே ஒரு வித துயர். என்னைத் தனியாகக் கூட்டிச் செல்கின்றார். எனக்கு எதுவுமே புரியவில்லை. நான் அவரது முகத்தைப் பார்க்கிறேன். ''ஒரு துக்கமான செய்தி. உங்கட அப்பா இறந்து போனார். திருகோணமலையில் இருந்து செய்தி குடுத்திருக்கிறாங்க. உங்களை மட்டக்களப்புக்கு வரச்சொல்லி பாதர் சொல்லச் சொன்னார்'' ஆனந்தன் அமைதியாகச் சொல்லி முடிக்கின்றார். நான் எதுவுவே பேசவில்லை. அந்தச் சிறுவர்கள் விளையாடுகின்ற மரத்தடியில் வந்து இருந்து கொள்கிறேன். ஆனந்தன் என்னிடம் சொன்ன அந்தச் செய்தி அங்கு விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களுக்கும் கேட்டுத்தானிருக்கவேண்டும். விளயாட்டுக்களையெல்லாம் உடனடியாக நிறுத்தி விட்டார்கள். அந்தப் பிஞ்சு முகங்களிலே பரிதாப ரேகைகள் படர்வதை என்னால் உணரமுடிகின்றது. அந்த இடத்திலே மௌனம் நிலவுகின்றது. அந்தச் சிறுவர்கள் மூலமாகச் செய்தி பரவுகின்றது. எனக்கு அறிமுகமானவர்கள் வந்து என்னிடம் விசாரிக்கிறார்கள், என்னால் எந்தப் பதிலும் சொல்ல முடியாமலிருக்கிறது. ஆனந்தன் தந்துவிட்டுச் சென்ற அந்தச் செய்தியை என்னால் சீரணிக்க முடியாமலும் நம்பமுடியாமலும் இருந்தது.

✶ இறைவனை அடைய ஒரே பாதைதான் உண்டு. அது தான் பணிவு. மற்றப் பாதைகள் வேறிடங்களுக்குக் கொண்டுபோய் விடும்.

... பாய்லியோ

இரண்டு கிழமைக்கு முன்னர் தான் வீட்டிற்குச் சென்று எல்லோரையும் பார்த்துவிட்டு வந்த நான், அங்கு வீடுகளைப்பொறுத்த வரை எல்லாமே தரைமட்டமாகிவிட்ட நிலைதான். இனவெறியாட்டமும் காடைத்தனங்களும் தலைவிரித்தாடியதை எரிந்தும் இடிந்தும் சர்வ நாசமாகிக் கிடந்த வீடு வாசல்கள் படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தன. அங்கு எவ்வித பேதங்களுமின்றி எல்லோருமே அகதிகள் என்ற பட்டத்துடன் பாடசாலையிலும் கோயில் மண்டபங்களிலும் தஞ்சம் புகுந்திருந்தார்கள். எங்கள் வீட்டிற்கும் பாரிய நட்டந்தான். இனி என்ன செய்வது; உயிர் தப்பியதே போதும் என்ற நிலையில் மனதைத் தேற்ற வேண்டி இருந்தது.

வீட்டிலே அப்பா மட்டுந் தான். அம்மாவும் நான் அறியாத பருவத்திலே கண்களை மூடிவிட்டார். அன்றிலிருந்து என்னையும் இரண்டு சகோதரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் அப்பா தான் எந்தவித குறையுமின்றிப் பார்த்து வந்த வர்.

எங்களைப் பொறுத்தவரை யில் தாய் இல்லை என்கிற குறையே தெரியாமலிருந்தது. அத்தனை கரிசனை,... அத்தனை அன்பு. அப்பா ஒரு நாள் கூட வருத்தமென்று படுக்க மாட்டாரே. அப்பா ஒரு ஓய்வு பெற்ற அதிபர். ஆனால் அவரது தோற்றமும்... உறுதியும்... அவரை ஓய்வு பெற்றவர் என்று கூட நம்பமாட்டார்கள். எனக்குள் எத்தனையோ எண்ணங்கள் அலைமோதுகின்றன.

எப்படி நடந்திருக்கும், என்ன நடந்திருக்கும் எதையுமே என்னால் தீர்மானிக்க முடியாமல் இருந்தது, நேரம் நான்கு மணி இருக்கும். நண்பன் சுரேசும் எங்கள் அத்தானும் வந்து விட்டார்கள். அவர்கள் வந்த பிறகுதான் எனக்கு எல்லாமே தெரிய வந்தது. எனது சந்தேகங்களுக்கெல்லாம் தீர்வு கிடைத்தது. எனது அப்பா... மச்சாள்... அண்ணா... அண்ணாவின் இரண்டு மக்கள் அத்தான்... அக்காமுறையான ஒருவர்... எல்லோருமே சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார்கள். தலையிலே பெரும் பாறாங்கல் விழுந்தது போன்ற அந்தச் செய்தி என்னைச் செயலிழக்கச் செய்துவிட்டது. அவர்களுக்கும் என்ன நடந்ததென்று கூடத் தெரியாது. என்னை ஓரளவு கட்டுப்படுத்த என்னால் முடிந்தாலும் அக்காவை சமாதானப் படுத்துவது பெரும் சிரமமாக இருந்தது. அந்த நாளைப்பார்த்துத்தான் ஒட்டமாவடி அசம்பாவிதம் தொடங்குகிறது. அதன் எதிரொலி முப்பத்தாறு மணித்தியால ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. நான் ஒவ்வொரு உறவாக எண்ணிஎண்ணி ஊமையாக அழுது வடிக்கின்றேன்;

நான் கடைசியாக இரண்டு கிழமைக்கு முன்னர் வந்து சந்தித்து என்னை வழி அனுப்பி வைத்த அந்த உறவுகளை சேமக்

★ கண்ணியமான புகழுக்கு எது வழி என்று சாக்கிரடீசிடம் கேட்டபோது அவர் கூறியதாவது: நீ வெளியே எப்படித் தோன்ற விரும்புகின்றாயோ அப்படியே ஆகிவிடப் பயிற்சி செய்'' என்று கூறினாராம்.

எல்லாத் தொல்லைகளும் நீங்கி நான் வீட்டிற்குப் போனபோது அங்கு எல்லாமே நடந்துமுடிந்து விட்டன. என்னைக் கண்டதும் எல்லோரும் வந்து ஏதேதோ சொல்லி அழுது வடிக்கிறார்கள். என் கண்கள் கரைந்து வடியாவிட்டாலும் உள்ளம் பலமாக அழுதது.

தனிமையின் வெறுமையினை என்னால் உணர முடிந்தது. பொலிஸ் படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனத்திற்கு ஒரு குடும்பமே பலியாகிவிட்டதை மூடி மறைக்க தொடர்புசாதனங்கள்'ஏழுபயங்கரவாதிகள் சுட்டுக்கொலை' என்று அப்பட்டமான பொய்யைக் கூறியதை நினைக்கும்போது ஆண்டவனையா... ஆள்பவனையா குறை கூறுவதென்று தெரியாமலிருந்தது.

காலையிலே சென்று சந்திக்கின்றேன். ஒரே வரிசையில் ஏழு சிலுவைகள் நிரையாக நின்று என்னை வரவேற்கின்றன. முரட்டுக் கரங்கள் என் இதயத்தை கசக்கிப் பிழிவதுபோன்ற பிரமையை என்னால் உணர முடிகின்றது. அந்த இடத்திலே அந்த நாயும் என் அருகே நிற்கின்றது. அது மச்சாள் சாப்பாடு போட்டு வளர்த்த நாய். அது என்னோடு வந்திருக்வேண்டும். அந்தக் கண்களில் ஒருவித கலக்கம். முகத்திலே ஒருவித சோர்வு. ''கடவுளே! எவரெவரையோ முன் வைத்து தர்மங்களைப் பற்றிப்பேசுகின்ற மனிதரிடம் இல்லாத இரக்கமும் அன்பும் இந்த நாயிடத்திலாவது இருக்கிறதே'' என்னை அறியாமலே என் வாய் முணு முணுக்கிறது....

★

மூதூர் N. C. அருள்வரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரொலி

## அன்னை அவள் ஒரு மெழுகுதிரி

### அவளுக்கு எம் அஞ்சலி...!

ஐம்பது நாட்களாக நீர் கூட அருந்தாது உண்ணு விரத மிருந்த திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த ஏப்ரல் திங்கள் 19ம் நாள் உயிர்நீத்தார்.

இந் நாட்டில் அமைதியும், சமாதானமும் உருவாகி தமிழர் பாதுகாப்போடும், சுய மரியாதையோடும் வாழ, இந்தியத் தரப்பினரும், விடுதலைப் புலிகளும் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்பதே உண்ணுவிரதத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. ஆனல் அனைவரும் எதிர்பார்த்தது போலவே இந் நோக்கம் நிறைவேறவில்லை. பொறுப்புள்ளவர்களால் நிராகரிக்கப்பட்டு அன்னை பூபதியின் உயிர் பிரிந்துவிட்டது.

அஹிம்சைப்போராட்டத்தால் வருவது சாவு, தோல்வி என்ற எண்ணம் எழுவது மிகவும் ஆபத்தானது. ஐம்பதுகளில் ஏற்பட்ட இத்தகைய பாதிப்புத் தான் ஆயுதப் போராக வெடித்தது என்பதை மறத்தலாகாது.

அஹிம்சைப் போராட்டத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய இந்தியாவுடன் இலங்கை ஒப்பந்தம் செய்தபின் தீர்வுகள் திருப்தியளிக்காத நிலையில் அஹிம்சைப் போராட்டத்தில் ஈடுபட இலங்கைத் தமிழர்கள் தள்ளப்பட்டனர். அதன் விளைவே அன்னைபூபதியின் மரணம்.

தமிழினத்துக்காக, சமூகத்துக்காக அரிதான உயிரையே அர்ப்பணித்த அன்னைக்கு நாம் துயரந்தோய்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேம்.

தாய் ஒருத்தி தன் இனம் வாழ உண்ணு நோன்பிருந்து உயிர்நீத்தது நாம் அறிந்த வரையில் இதுவே முதல் நிகழ்வு ஆகும். இவ்வொப்பற்ற தியாகச் செயலைப் புரிந்தவளுக்கு தமிழினம் - குறிப்பாக மட்டு நகர் மக்கள் எந்தளவு மரியாதை தந்தார்கள்? ஓடிவந்து அஞ்சலி செய்தார்கள்? அடக்கச் சடங்குகளிலே கலந்து கொண்டார்கள்? மட்டக்களப்பு மாவட்டமே திரண்டு வந்திருக்க வேண்டும். ஆனல் மட்டக்களப்பு நகர மக்களில் கூட பெரும் பான்மையோர் வரவில்லை. காரணங்கள் சொல்வது எளிது. சாட்டுக்கள் எமக்கு வேண்டாம்.

நமக்காகப் போராடுபவர்களை நாம் வாழத் தியாகம் புரிபவர்களை நாமே ஏற்றுக்கொள்ளாதபோது, மரியாதை தராதபோது அடுத்தவன் - எதிரி எப்படி மரியாதை செய்வான்? எமது தோல்விகளுக்குக் காரணம் இத்தகைய சுரணையற்ற, மந்தைத்தனமான மனப்போக்குகளும், ஒற்றுமையின்மையும் தான். இவ்விழிநிலை மாருதா வரை எத்தனை திலீபன்கள், எத்தனை பூபதிகள் மாண்டொழிந்தாலும் நமக்கு விடிவே வராது.

இலங்கையில் தமிழினம் ‘இனி என்ன செய்வது’ என்று தெரியாத ஓர் இக்கட்டான சூழ்நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. பல முனைகளிலும் ஆபத்துக்களே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறன. பாதுகாப்பற்ற - தலைமையற்ற - ஆதரவற்ற வழிகாட்டுவாரற்ற ஒரு வறண்ட சூழ்நிலை. குடியேற்றம் என்ற பெயரில் குடியிருப்புக்களும் விழுங்கப்படும் அவலம். எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாகி அனைவருமே பகையாகி நிற்கின்ற பரிதாப நிலை.

இதுதான் தமிழினம் தன்னையிட்டு ஆழமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு காலம். தனது நடவடிக்கைகளை, செயல் முறைகளை கடந்தகால, நிகழ்கால, எதிர்கால விளைவுகளையிட்டு ஆழச்சிந்தித்து ஒழுங்கான கட்டமைப்

பொன்னற உருவாக்கி திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய காலம். தமிழ் மக்களது பலங்களும் வளங்களும் ஒன்று திரட்டப்பட்டு செயற்படுத்தப் படாவிட்டால், இதனை நாம் இன்னும் உணராவிட்டால் ... ... ... !

உதயம் கீழ்வானத்தில் இல்லை !

மலர்வேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எல்லாம் நிறைவேறிற்று"



இராணுவம் வருகிறதென்றால் பயத்தின் அறிகுறிகளைக் காணலாம். அதிலும் இராணுவம் அனைவரையும் கடுமையாக சோதிக்கிறதென்றால் அனைவரின் உள்ளத்தின் ஆழத்தில் கலக்கம் ஏற்படும். ஆனால் வந்த இராணுவம், உள்ளத்தில் கலக்கத்தை ஏற்படுத்திய இராணுவம் திரும்பிப் போய்விட்டதென்றால் '' அப்பாடா '' என்றொரு பெருமூச்சு. தற்காலிக பயம் தீர்ந்து விட்டது, ஒரு கால் பந்து விளையாட்டு கழகம் அங்கத்தவர்களை சேர்த்து தினமும் கடுமையான பயிற்சி எடுத்து தம்மை ஆயத்தம் செய்து, போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு கடினமாக விளையாடி வெற்றிக் கிண்ணத்தை தட்டிச்செல்லும் போது உள்ளத்திலே ஒரு மகிழ்ச்சி மன நிறைவு. கஷ்டப்பட்டு உழைத்தது வெற்றியளித்து விட்டது.

யேசுக் கிறீஸ்து உலகிற்கு ஒரு பணிக்காக வருகின்றார். இப் பணிக்கு வார்த்தையாலும் வாழ்க்கையாலும் செயல் வடிவம் கொடுக்கின்றார். தன் பணியின் முழுமையில் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றார். '' எல்லாம் நிறைவேறிற்று '' என்று கூறி தன் ஆவியை கையளித்தார்.

மனித வாழ்க்கை பலவிதமாக வர்ணிக்கப் படுகிறது. ஒவ்வொருவரும் வெவ்வேறு கால கட்டத்தில், சூழ் நிலைகளில் பிறந்து வளர்ந்து முதிர்ச்சி பெறுகின்றனர். மனிதனுக்கு வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றது. ஆனால் சிலருக்கு வாழ்க்கை முழுவதும் கஷ்டங்கள். வேறு சிலருக்கு வாழ்க்கை முழுவதும் இன்பம். நமது வாழ்க்கையை நமது இஷ்டத்திற்கு தேர்ந்தெடுக்க முடியாது. நாம் வாழும் காலகட்டத்தில், நாம் வாழும் சூழ்நிலையில் நமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. எப்படியும் வாழலாம் என்பதல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே வாழ்க்கை.

உலக அரங்கில் இன்ன வேடத்துடன் நடிப் போமென்று கூற முடியாது. கொடுத்த வேலையைத் திறம்படச் செய்து முடிப்பதே நம் கடன். வாழ்க்கையின் தத்துவத்தைப் பலரும் வர்ணிக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்திருப்பதை யாரும் மறுக்கவில்லை. வாழ்க்கை என்பது தென்றல் காற்றில் ஊஞ்சலாடுவது போலல்ல கொடும் புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது, என்கின்றார் ஓர் அறிஞர். தூக்கத்தின் துணையோடு இருந்த போது கனவொன்று கண்டேன், அதில் வாழ்க்கை அழகு மிக்கதாக இருந்தது. கனவு கலைந்து விழித்து எழுந்தபோது வாழ்க்கை கடமை நிறைந்தது என்று கண்டு கொண்டேன். என்கின்றார் ஹெலன் ஹீபர்.

தொட்டிலுக்கும் சுடுகாட்டிற்கும் இடைப் பட்டதுதான் வாழ்க்கை என்றும் மனிதனுடைய ஆயுளில் கழிந்த காலம் போக உண்மையில் இருப்பது ஒரு கணநேரமே என்றும் வாழ்வு என்பது ஆற்று நீரைப் போல ஓடிக் கழிந்து போகும் ஒரு நிகழ்ச்சியே என்றும் அறிஞர்கள் தமது அநுபவங்களை வெளியிடுகின்றனர். எனவே மனித வாழ்க்கை முற்றிலும் இளந்தென்றலாக இருப்பதில்லை, அல்லது அது முற்றிலும் சூழன்றடிக்கும் குருவளியாகவும் இருப்பதில்லை. இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை. முன்னதை அனுபவிக்கவும் பின்னதை எதிர்த்து நிற்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் அறிந்து கொள்ளவேண்டும். இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் வாழ்க்கை. துன்பம் நிறைந்த இந்த வாழ்க்கைப் பயணத்திலே இன்பம் பாலைவனச்சோலையாக அமைகிறது. மனிதன் வாழப்பிறந்தவன். இன்னல்களைக் கண்டு துவண்டு விடுவதற்கல்ல. ஏதோ பிறந்து விட்டோம் வாழ்கிறோம், என்று வாழ்வதல்ல வாழ்க்கை; ஒவ்வொரு சவாலையும் முழுப் பலத்துடன் எதிர்த்து வாழ்வதே வாழ்க்கை. எமது வாழ்க்கையின் தத்துவம் என்ன?

நமது வாழ்க்கைக்கு கிறீஸ்து ஒரு வழிகாட்டியாக இருக்கின்றார். ஒரு நோக்கத்திற்காக இவ்வுலகிற்கு வந்தவர் தனது அழைப்பின் சவால்களை எதிர்கொள்ள துணிகின்றார். பணியின் ஆரம்பத்திலேயே அவருக்கு சோதனை. வாழ்க்கையில் தொடர்ந்து வரப்போகும் சோதனைகளை எதிர் கொள்ளத் தயாராகித் தன் பணியினை தொடங்குகின்றார்.

எகிப்திய மன்னனொருவர் தமது நூல் நிலையத்தின் வாயலில் 'ஆன்மாவின் மருந்துகள்' என்று எழுதியிருந்தார். அப்படி மருந்துகளாயிருக்க வேண்டுமானால் நாம் நல்ல புத்தகங்களை மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அவரது போதனையை ''அன்பு'' என்ற சொல்லில் சுருக்கி விடலாம். பாவிகளை, ஆயக்காரரை விபச்சாரிகளை, தொழுநோயாளிகளை, புறவினத்தாரை, யூதர் தமது சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்த காலம் அது, மனிதனை விட சட்டத்திற்கும், சமயத்திற்கும், சம்பிரதாயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட காலம் அது. இப்படிப்பட்ட எண்ணங்களையும் கொள்கைகளையும் கொண்ட யூத சமூகத்தில் அதே சமூகத்தவனாக பிறந்து வளர்ந்து புதிய நெறியை அறிமுகப்படுத்தினர். ''பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.'' லூக். 6;31.

ஒருவன் பாவியாக இருக்கலாம்; புறவினத்தவனாக இருக்கலாம்; யூதனாக இருக்கலாம்; ஆனால் அனைவரையும் இறைவன் அன்பு செய்கின்றார், என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறார். இப் புதிய திருத்தப்பட்ட போதனையினால் கிறீஸ்துவுக்கு கிடைத்த பரிசு வேதனை. கல்லால் எறிந்து கொல்ல முற்பட்டார்கள்; முடியவில்லை. வேறு வழி தேடினார்கள்; காட்டிக் கொடுக்கப்பட்டார். பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டது. சொல்லடி, கசையடி, முள் முடி அனைத்தையும் தாங்கி சிலுவையைச் சுமந்தார். அவர் சுமந்தது மரத்தால் செய்யப்பட்ட பாரச் சிலுவையை அல்ல மானிடரால் சுமத்தப்பட்ட பாவச் சின்னத்தையே. பாடுகளும் சிலுவைச் சாவும் கிறீஸ்துவின் பணியின் உச்ச கட்டம். தனது பணி வாழ்வின் நிறைவை சிலுவையில் வெளியிடுகின்றார். ''எல்லாம் நிறைவேறிற்று'' தனது பணி, நோக்கம், தந்தையின் விருப்பம் எல்லாம் நிறைவேறிற்று. இது கிறீஸ்துவின் வாழ்க்கைத் தத்துவம் மனிதன் நாளாந்தம் தனது சிலுவையைச் சுமக்க வேண்டும். அன்புச் செய்தியை உலகமெங்கும் பரப்ப வேண்டும். தன் பணியை சீடர்கள் தொடர்ந்து செய்யக் கட்டளையிட்டார். ''உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற் செய்தியினை அறிவியுங்கள்'' மாற்கு 16 : 15

இன்று நமது வாழ்க்கைத் தத்துவமும் கிறீஸ்துவினுடையதைப் போல் இருக்கவேண்டும் நான் எனக்கென்று வாழாது சமூகத்திற்காக வாழ நான் முன் வர வேண்டும். மற்ற மக்களுக்கு நன்மை செய்வதே ஒருவன் சமுதாயத்திற்கு செலுத்தவேண்டிய கடன் என்று ஹிந்து தர்மம் கூறுகின்றது. கடவுளுக்குப் பிரார்த்தனை செய்கின்ற உதடுகளை விட மக்களுக்கு உதவி செய்கின்ற கைகளே மேலானவை என்கின்றார் அறிஞர் இங்கர்சால்.

உண்மையாகவே அன்பு காட்டி அன்பைப் பதிலுக்கு எதிர்பாராதவரும் சேவித்து சேவிக்கப்படாதவரும் பிறருக்கு நன்மை செய்து பிறர் தமக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணுதிருப்பவரும் ஆசீர்வதிக்கப்படுவர்.

ஆகவே நாம் வாழும் சமூகத்தில் அன்பையும், நீதியையும், சகோதரத்துவத்தையும் கொண்டு வர நாம் முயல வேண்டும். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்து நாளை செயல்பட்டு கிடைக்கக் கூடிய காரியமல்ல இது. நாட்களாகலாம், வாரங்களாகலாம், வருடங்களாகலாம். ஆனுல் சமுதாயம் சீர் திருத்தப்பட வேண்டும், அநீதிகள் ஒழிக்கப்பட்டு சமத்துவம் உருவாக வேண்டும். அதற்கு நான் சிறு துரும்பாகவோ அல்லது பெரிய கருவியாகவோ பயன்பட வேண்டும்.

நாம் எப்போது செயல்பட வேண்டும்; யாரில் தொடங்க வேண்டும்? ஒன்றே செய்க, நன்றே செய்க, அதை இன்றே செய்க! எமது பணி இன்றே தொடங்க வேண்டும். அது எம்மில் தொடங்க வேண்டும். சிலர் சமயத்திற்காக தம்மை அர்ப்பணிப்பதை பார்க்கிருேம். வேறு சிலர் சமூக மாற்றத்திற்காக தம்மை அர்ப்பணிப்பதைப் பார்க்கிருேம். இன்னும் சிலர் நாட்டிற்காக தம்மை தியாகம் செய்கிருர்கள். நமது தியாகமும் சேவையும் எதுவாக இருந்தாலும் அது சமூகத்தைப் போய் சேர வேண்டும். இதற்குப் இப் பணி எம்மில் தொடங்க வேண்டும்.

ஒரு முதியவர் கடைசி நாட்களில் தனது வாழ்வின் எண்ணங்களையும், அனுபவத்தையும் கூறுகிள்ருர். ''நான் பதினைந்தாவது வயதில் இருக்கும்பொழுது உலகத்தைப் பார்த்தேன். துன்பமும், அநீதியும், சுயநலமும், அதிகாரமும் நிறைந்திருந்தது. எனவே இவ்வுலகை நான் திருத்த வேண்டுமென்று செயல் படத்தொடங்கினேன், முப்பதாவது வயதில் உலகத்தைப் பார்த்தேன். உலகமென்ன என் நாடே மோசமாக இருந்தது. எனவே என் நாட்டைத் திருத்த வேண்டுமென்று செயல் படத்தொடங்கினேன். நாற்பதாவது வயதில் என் நாட்டைவிட என் மாவட்டத்திற்கு என் பணி தேவையாக இருந்தது. என் மாவட்டத்தை சீர் திருத்த ஆரம்பித்தேன். ஐம்பதாவது வயது வந்தது. மாவட்டம் மாறவில்லை, ஊரையாவது நான் சீர்திருத்த வேண்டும் என்று செயல் பட்டேன். அறுபதாவது வயதில் விழித்து உலகத்தைப் பார்த்தேன். என் உள்ளம் விழித்துக் கொண்டது. உலகமோ, நாடோ, மாவட்டமோ, ஊரோ என்னுல் திருந்தமுன் நான் திருந்த வேண்டும். நீ திருந்து உலகம் தானுகவே திருந்தும் என்ற பழமொழிக்கு ஏற்ப முதலில் நான் மாற வேண்டும். சமூகம் மாறுவதற்கு எனது மனமாற்றம் முதல் படியாக அமைந்து விடும். இதுவரை என்னைத் தவிர என்னைச் சுற்றியுள்ள அனைத்தும் திருந்த வேண்டுமென்றிருந்தேன். எனது வாழ் நாட்களை வீணடித்து விட்டேன். நான் முதவில் திருந்தியிருந்தால் சமூகமும், நாடும், உலகமும் தானுகவே திருந்தியிருக்கும் என்பதை இப்போது உணருகின்றேன்.'' என்ருர் அந்த முதியவர்.

> ★ வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் அழிவில்லாத வாழ்க்கையை அறிந்துகொள்வதாகும்.
>
> - பென்.

காந்தியடிகள் ஆபிரிக்காவில் வாழ்ந்த இந்திய மக்களுக்கும் இந்தியாவில் வாழ்ந்த இந்தியருக்கும் விழிப்புணர்ச்சியை ஊட்டினுர். அவர்கள் தமது உரிமைகளை தட்டிக் கேட்பதற்கு அவர்களைத் தூண்டினுர். ஆனுல் அதற்கு முன் அவர் திடமுள்ளவராகவும் தொடங்கியதை செவ்வனே செய்து முடிக்க வேண்டும் என்ற வைராக்கியமுள்ளவராகவும் இருந்தார். போதனைக்கு முன் அவர் செய்து காட்டினுர். நாட்டைத் திருத்துமுன் தன்னைத் திருத்தினுர்.

இன்று நமது சமூகம் பொருளாசையாலும் பொருமையாலும், தன்னலத்தாலும் சீர்குலைந்திருக்கிறது. எனது பணி இந்த சமூகத்திற்கு தேவை. சீர்குலைந்த சமூகம் திருந்துவதற்கு முதல்படி நான். நாம் திருந்த சமூகம் திருந்த இறைமகன் விட்டுச் சென்ற பாதையில் பின் தொடர்வோம்.

> '' காடியைச் சுவைத்த பின் இயேசு 'எல்லாம் நிறைவேறிற்று' என்ருர். பின்பு தலை சாய்த்து ஆவியைக் கையளித்தார்.''
>
> அரு, 19 : 30.

இன்று நாம் எம்மையே கேட்க வேண்டிய கேள்வியெல்லாம் நான்'சாகும்போது 'எல்லாம் நிறைவேறிற்று' என்று இயேசுவைப் போல் நம்மால் கூற முடியுமா ?!'

- என், எம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னன் இயேசு உயிர்த்த....

இராகம் : காம்போதி

தாளம் : ஆதி.

பல்லவி

மன்னன் இயேசு உயிர்த்த மகிமையின் அதிசயம்
மானே நீ அறிவாயோடி ? தோழி... (மன்னன்)

அனுபல்லவி

என்னென்று உரைப்பேன் நான் இறந்து நாள் ஒரு மூன்றில்
முன்னம் மொழிந்தபடி மூவுலகும் போற்ற - மன்னன்...

சரணங்கள்

ஞாயிறு அதிகாலை நற்றவ வேளையில்
ஞாலம் புகழ்ந்திடும் நற்பரன் இயேசுபிரான்
காலத்தை வென்ற மகான் கருணையின் சுடரொளி
சீலமுடைய செம்மல் திக்கெல்லாம் ஒளிபரவ (மன்னன்)

மின்னலுடன் இடிவந்து மோதி அதிர்ந்திட
மிகப்பெரிய பூகம்பம் ஒன்று நிகழ்ந்திட
பொன்னிறத்து வானதூதன் பூவுலகு வந்தடைந்து
புனிதரின் கல்லறைக் கல்லைப் புரட்டிட (மன்னன்)

பரிமளத் தைலங் கொணர்ந்த பாவையர் மூவரும்
பதறியே நின்றிடப் பார்த்த தேவதூதன்
பயங்கொள் வேண்டாம் நீங்கள் பரமன் உயிர்த்துவிட்டார்
பார்த்திடுவீர் அவரைக் கலிலேயாவினில் என்றான் (மன்வன்)

தோட்டத்தில் அழுதுநின்றாள் சுந்தரி மகதலேனாள்
காட்டினார் தம் உருவை கனிவுடன் கன்னிகைக்கு
வாட்டத்தை விட்டுவிடு மரியாளே விரைந்து சென்று
கூட்டத்துச் சீடருக்கும் கூறிடு இதனை என்றார். (மன்னன்)

- இயேசு நேசன் -
முதியோர் இல்லம்
மட்டுநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் வளர...

**துணை நில்லுங்கள் !** **பரிசை வெல்லுங்கள் !!**

## செய்யவேண்டியது இதுதான்

★ தொண்டனுக்கு இரண்டு புதிய சந்தாக்களைச் சேர்த்து, பிரசுரிக்கப் பட்டுள்ள சந்தாப் படிவத்தையும் நிரப்பி இருவரதும் ஆண்டு சந்தாவாக (50 - 50) ரூபா 100/- காசுக்கட்டளையில் ஆசிரியர் பெயருக்கு அனுப்பப் படவேண்டும்.

★ ஒவ்வொரு 200 சந்தாக்கள் சேர்ந்ததும் சீட்டிழுப்பின் மூலமாக, சந்தாக் கள் சேர்த்தனுப்பிய மூவருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

★ ஒருவர் எத்தனை சந்தாக்கள் வேண்டுமானாலும் சேர்த்து அனுப்பலாம். ஆனால் அவை மறுபக்கத்தில் உள்ள சந்தாப் படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு படிவமும் தனித்தனியாகவே கணக் கிடப்படும். அதிக சந்தாக்கள் சேர்த்து அனுப்புவோருக்கு சிறப்புப் பரிசுகள் உண்டு.

★ குறிப்பிடப்படும் மாதத்திலிருந்து தொடர்ந்து பன்னிரண்டு மாதங்களுக் குத் தொண்டன் இதழ்கள் தவறாது அனுப்பப்படும்.

★ ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு சந்தாக்களையாவது சேர்த்து தொண்டன் வளரத் துணை நிற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகவரி:-

**ஆசிரியர் - தொண்டன்**
சமூகத்தொடர்பு நிலையம்,
ஆயரகம், மட்டக்களப்பு.

## நம்மவருக்குப் பரிசு -

அண்மையில் நடந்து முடிந்த 'மஹாபொல' நிகழ்ச்சியில் இடம்பெற்ற பாட்டுப் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த செ. பாஸ்கரன் இரண்டாம் இடத்தைப் பெற்று, பரிசாக ரூபா 2500/-ஐ தட்டிக்கொண்டார்.

அனைத்திலங்கை ரீதியில் மும்மொழிகளில் நடைபெற்ற இப்போட்டியில் தமிழ்ப் பிரிவில், தானே இசையமைத்துப் பாடிய பாடலுக்காக இப் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

பாடலை இயற்றியவர் மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல கவிஞர் செ. குணரெத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் வளரத் துணை நிற்போம்

சந்தாப் படிவம்

(1) பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

..........................................................................

(2) பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

..........................................................................

— — — — — — — — — — — — — — — — — —

தொண்டன் வளர்ச்சிக்காக இரண்டு சந்தாதாரர்களைச் சேர்த்துள்ளேன். அவர்களது ஆண்டுச் சந்தா ரூபா 100/-. ரூபாவுக்கான காசுக்கட்டளையையும் இத்துடன் இணைத்துள்ளேன். இருவருக்கும் ....................... மாதம் முதல் தொண்டன் சஞ்சிகையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்

இப்படிக்கு

..........................................

ஒப்பம்.

எனது பெயர்: ..........................................................................

முகவரி: ..........................................................................

..........................................................................


V இங்கே கத்தரிக்கவும் V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 50

## (இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ச்சிகள்)



**பரிசு: ரூபா 50/-, 25/-.**

**முடிவுத் திகதி: 30-5-88.**

முழுப் பெயர்: ..........................................................................

முகவரி: ..........................................................................

..........................................................................

இடமிருந்து வலம் !-

1. உயிர்த்த இயேசுவை சீடர் இருவர் எதிர்கொண்ட பாதை.
2. புரட்டப்பட்டதால் தடம் புரண்டு விட்[டது,
5. மீன்கள் ஏராளமாய் விழுந்ததால் இது குழம்பி நிற்கின்றது.
6. ஆணிகள் இருந்த இடத்தில் இதனை விடும்படி இயேசு கூறினார்.
7. இதன் ஒளி வீசும் ஆடை அணிந்த இருவரைத்தான் பெண்கள் கல்லறையில் கண்டனர்.
9. யூதருக்கு அஞ்சி சீடர்கள் கூடியிருந்த இடம்.
10. இயேசு உயிர்த்த செய்தியைக் கேட்ட இவர்களும் இப்படித்தான் குழம்பிப் போய் இருந்தனர்.
13. மரியாள் இயேசுவை இவ்வாறு எண்ணினாள்.
15. இயேசு உயிர்த்ததை விசுவசிப்பவனுக்கு இது தேவையல்ல. அதனால் தான் குழம்பிக் கிடக்கின்றது.
16, இது முறிபடாததற்கும் ஒரு காரணம் உண்டு.

மேலிருந்து கீழ் !-

1. புதிய உடன்படிக்கை பற்றிப் பேசிய இறைவாக்கினர் முடிவின்றி நிற்கிறார்.
2. எங்களோடே தங்கும்! என்று சீடர் கூறியதற்கு இதுவும் ஒரு காரணம்.
4. பெண்கள் இயேசுவின் உடலைத் தேடியது இங்கு தான்.
6. உன் கையை இதில் இடு என்று யேசு தோமையாரிடம் கூறினார்.
8. இயேசு இந்த நூலைத் தெளிவாக்குகையில் சீடரின் உள்ளம் உருகியது.
9. இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டியது.
11. கல்லறைக்கு இவன் காவல் நிற்கவில்லை.
12. யூதாஸ் இறந்த விதம்.
13. சந்தேகங்கொண்ட அப்போஸ்தலர் முடிவின்றித் தவிக்கின்றார்.
15. இயேசுவின் உயிர்ப்பினால் இது வீழ்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி -- 48.
## முடிவுகள்

இடமிருந்து வலம் -

1. இரக்கம்
4. சாராள்
6. (சைவ) வசை
7. தப்பு
11. (ன்மா) மான்
13. சிங்கம்
15. (ல்க) கல்
16. வாக்கு
17. பூ

மேலிருந்து கீழ் -

1. இராயப்பன்
2. கணவன்
3. ஞானஸ்நானம்
4. சாந்தம்
5. கழு
8. காயங்கள்
9. நா
10. தீ
12. மாற்கு
13. சில்வானு
14. நோவா

### - சரியான விடை அளித்தோர் -

1ம் பரிசு:

யோசப் சந்தணம்பிள்ளை செபமாலை
மே/பா. பங்குத் தந்தை.
புனித லூர்து அன்னை ஆலயம,
பாலையூற்று,
திருகோணமலை.

2ம் பரிசு:

பிறீட்டா கல்பனு யேசுதாசன்
இல. 6, முனைத் தெரு,
2ம் குறுக்கு,
மட்டக்களப்பு.

### - பாராட்டுப் பெறுவோர் -

1) E, A. B· தேவராசா
புனித வளன் இளங்குருமடம்,
விமான நிலைய வீதி,
மட்டக்களப்பு,

2) செல்வி இருதயநாயகி கந்தையா
இல. 5, அரசாங்க விடுதி ஒழுங்கை,
கல்லடி,
மட்டக்களப்பு.

3) செல்வி அ. ஸ்ரெலா பாரதி
B. L, 47, 5வது அவெனியூ,
அம்பாறை.

4) ஞானப்பிரகாசம் மேரி மெக்டலின்
இல. 31, காளி கோவில் வீதி,
பெரிய ஊறணி,
மட்டக்களப்பு.

5) செல்வி இராசையா மங்களேஸ்வரி
' கற்பித்தார் கவுஸ் '
நுகவில்,
கரவெட்டி.

பங்குபற்றியோர் : 46,
சரியான விடை அளித்தோர் : 12,

**அனைவருக்கும் எமது நன்றி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# உங்கள் பக்கம்

## பாராட்டு

மாசி மாத இதழில் மலர்ந்த மாசிலாமணியின் சிறுகதை வெகு சிறப்பாக இருந்தது. பாராட்டுக்கள்.

அ, செல்வரூபன்
கல்முனை,

## சிந்தனைக் கரு

மாசித் தொண்டனைக் கண்ணுற்றவர்கள் பலர் மனமாற்றம் அடைந்திருப்பார்கள் என எண்ண இடமுண்டு. காரணம் தேவா அவர்களது சிந்தனைக் கருவூலம்.

செல்வி அ, ஸ்ரெலா பாரதி
அம்பாறை.

## வேதனைக்குத் தீர்வு

தை மாத இதழ் பார்த்தேன். எல்லா விடயங்களும் சிறப்பாக இருந்தன. குறிப்பாக இதயத்திலிருந்து, என்று தணியும் இந்த ...... என்பன இக்கால கட்ட வேதனைகளை நினைவுபடுத்தியதுடன் அதற்கு ஒரு தீர்வையும் சுட்டிக் காட்டியது. ஹென்றி பொன்னையா அடிகளார் பற்றிய கட்டுரை அவரை அறிந்துகொள்ள உதவியது.

A. M, ரூபன்
வந்தாறுமூலை.

மாசி மாதத் தொண்டனில் இடம்பெற்ற கவிதை அனைத்தும் வெகு ஜோர்.

அதிலும் மூதூர் ஜெயராஜின் 'ஒரு பொறி பறக்கும் கவிதை' வாசகர்கள் இதயத்தை திறந்து விட்டிருக்கும் என்பது நிச்சயம். அதே போன்று மகனைப் பெற்ற தந்தையாக மாறியுள்ளார் நமது கவிஞர் செ. கு.

ஜே, அருளப்பு
மட்/ கண்ணகி வித்தியாலயம்

## ஏன் பேசவில்லை?

மாசி மாதத் தொண்டனில் வெளிவந்த 'தெளிவில் பிறக்கும் தியாகங்கள்' சிறுகதையில் நிச்சயமாக அமல்ருஜ் றெஜினாவை சந்தித்துப் பேசியிருக்க வேண்டும். ஏன் கதை ஆசிரியரைத் தொடர்ந்து கற்பனையில் நீந்த விடாது தடுத்தார்களா?

செல்வி மேபிள் மாட்டின்
சொறிக்கல்முனை.

## வரவேற்கத்தக்கது

மாசித் தொண்டனில் 'யாவும் பரீட்சை மயம்' என்ற கட்டுரையும், 'பாதரட்சை பேசினால்' என்ற தொகுப்பும் வரவேற்கத் தக்கவை.

ஏ, சகாயமலர்
பாலையூற்று.

## சிறு கதை நன்று

பங்குனித் தொண்டனில் வெளிவந்த 'கண் திறந்தது' சிறுகதை மிகவும் சுவைக்கத்தக்கதாக இருந்தது.

K W. மனோகரன்
அக்கரைப்பற்று.

## காதலோ காதல்!

பங்குனி மாதத் தொண்டனில் வெளிவந்த காதல் என்னும் கட்டுரை நன்றாக இருந்தது. உண்மைக் காதல் எதுவென்று உணர வைத்தது.

ஞானப்பிரகாசம் - ரவீந்திரராஜ்
S. ஜெஸ்மின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka




நாள்; 7, 8, 9 - 5 - 88
நேரம்; காலை 5-50 மணி
'கத்தோலிக்க நற்சிந்தனை'
வழங்குபவர் :
அருள்திரு, நோயல் இம்மானுவல்,

★

நாள் : 10 - 5 - 88
நேரம் : மாலை 6 - 45 மணி
'சிறுவர் உலகம்'
( கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி)
- விவிலியக் கதை
எழுதியவர் : கலைமணி,

★

நாள் : 15 - 5 - 88
நேரம் : மாலை 7-00 மணி
'புதிய உலகம்'
( கத்தோலிக்க நிகழ்ச்சி )
- மரியாளின் சிறப்பு - சித்திரம்
எழுதியவர் :
அருள்திரு, தேவதாசன்,
- 22வது உலகத் தொடர்பு தினத்தை ஒட்டிய
திருத்தந்தையின் சிறப்புச் செய்தி,

நாள : 21, 22, 23 - 5 - 88
நேரம் : காலை 5-50 மணி
'கத்தோலிக்க நற்சிந்தனை'
வழங்குபவர் :
திரு, A. S. ஞானப்பிரகாசம்,

★

நாள் : 24 - 5 - 88
நேரம் : மாலை 6-45 மணி
'சிறுவர் உலகம்'
( கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி )
- மரியாளும் யேசுவும் - உரையாடல்
எழுதியவர் :
P. D. A. ஜெயக்குமார்,

★

நாள் : 29 - 5 - 88
நேரம் : மாலை 7-00 மணி
'புதிய உலகம்'
( கத்தோலிக்க நிகழ்ச்சி )
- மரியாளின் ஆண்டு - வில்லிசை
எழுதியவர் :
அருள்திரு, தேவதாசன்,

இச் சஞ்சிகை மட்டக்களப்பு புனித வளனார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 3 - 5 - 1988ல் வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org